# வான்மதி

பெரி. சிவனடியான் B.A.,

விற்பனையுரிமை
செல்வி பதிப்பகம்
காரைக்குடி

வெளியீடு

கண்ணகி பதிப்பகம்

புதுவயல்

UNIVERSITY EXTENSION LIBRARY
26 SEP 1961
MADURAI

முதற் பதிப்பு: ஆகஸ்டு 1957 கண்ணகி வெளியீடு: 2

விலை ரூ: 1—0—0

16032

அச்சாக இருப்பவை

பணமும் மனமும் (நாடகம்)
காதற் பூங்கா (கவிதைத் தொகுப்பு)

அச்சிட்டோர்: ஜானகி பிரிண்டிங், புதுக்கோட்டை.

# முன்னுரை

(அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர். அ. சிதம்பரநாதன். எம். ஏ.,)

கவிஞர் சிவனடியான் இயற்றியுள்ள "வான்மதி" என்னும் கவிதை நூலினைப் படித்து மகிழ்ந்தேன். ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளக்கூடிய வகையில் இனிய நல்ல கவிதையை இயற்றியுள்ளதைக் கண்டு அவரைப் பாராட்டுகின்றேன்.

தமிழ்ச் சிறப்பு வகுப்பிற் படித்த "செல்வி" என்னும் பெண்ணிற்கும் வரலாற்று வகுப்பிற் படித்த "இனியன்" என்னும் ஆண் மகனுக்கும் இடையே ஏற்பட்ட காதலைக் குறித்து இதனைச் சிறந்ததொரு சொல்லோவியமாக ஆக்கித் தந்துள்ளார் கவிஞர். கவியில் உயிரும் ஓட்டமும் இருக்கின்றன. செல்வி என்னும் தலைமகளும் இனியன் என்னும் தலைமகனும் சிறுவராய்த் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பொழுதே விளையாட்டுக் காதலர்கள் ஆகிவிட்டார்கள் என்பதையும், படித்து முடித்த பிற்பாடு இருவரும் வெவ்வேறு இடங்களிற் பணியாற்றி வந்தாராயினும் ஒத்த உள்ளத்தாராய் இருந்தார் என்பதையும், செல்வியின் தாய் சோலை என்பாள் இடையே ஒரு நாள் குறுக்கிட்டு இருவர் வாழ்க்கையையும் அழிப்பதற்குக் காரணமாய் இருந்தாள் என்பதையும், செல்வம் தரும் அல்லலையும் உழைப்போர் உருகும் நிலைகளையும் இக்காவியம் விளக்கிக் காட்டிச் செல்கிறது.

செல்வி, இனியன் வாழ்வில் "வான்மதி". அவ்வான்மதி கைக்கு எட்டாததாயிற்று. நூல் வழி மக்கள் சிலர் இன்பம் பெறுதலைப்போல அவளை நினைந்து நினைந்து இன்பம் அடையத் துணிந்து விட்டான் காதலன் இனியன். அவனை மனத்தாற் கொஞ்சி மகிழ்வதாகச் செல்வியும் கடைசியில் முடிவு செய்துகொண்டு, பார்த்திருந்த பழைய வேலையை மேற்கொண்டு விட்டாள். அவளிடத்திலிருந்து சூழல்களாற் பிரிக்கப்பட்ட இனியனும் வங்காளப்பக்கம் போய் அவளை எண்ணிக் கரைகிறான். விண்ணிலே உள்ள வான்மதியைப் பார்க்கிற பொழுது அதில் தன் செல்வி உறைவதாக எண்ணி மகிழ்வான். இவ்வாறு முடிகிறது இக்கவிதை.

இக்கவிதையில் திரு. சிவனடியான் அவர்க்கே உரிய விதத்தில் சில புதுப்புது வருணனைகளைத் தந்துள்ளார். செல்வியை இலக்கியச் சுவையென்றும், சங்கம் இருந்த பொற்றமிழே என்றும், என்றன் வலக்கையே என்றும் அவன் கூறியது மாத்திரம் அல்லாமல், விரலிற் சேர வார்த்த மோதிரமே என மகிழ்ந்துரைத்தது நோக்கத் தக்கது. கவிஞர் சாதிப்பேய்களை வெறுக்கிறார் என்பது அறுபத்தோராம் செய்யுளாலும் பிற செய்யுட்களாலும் அறியப்படுகிறது.

காதலுக்கு மக்கள் அடிமையாகிறார்கள் என்பது, தொழிலக ஆலை வேலையிற் கோயம்புத்தூரில் அமர்ந்துள்ள இனியன் செல்விக்கு எழுதிய கடிதத்தில் "உன்னிடம் அடிமையான உவப்பு என் வேலைக்கு வருமோ" என வினவுவதால் அறியப்படும். காதல் பொல்லாத பெருமை உடையது என்பது எழுபத்தாறு முதலிய செய்யுட்களால் அழகுபட எடுத்தியம்பப்பட்டுள்ளது. தன் காதல் தீயைத் தணிக்க முன்வரும் நண்பர் இல்லையே என வருந்தும் இனியன் "ஆலையில் நெருப்பு என்றால் அணைக்கப் பலர் வருகின்றார்கள்; நெஞ்சின் மூலையில் நெருப்பு என்றால் முனைந்து எவர் அணைப்பர்" என்று கூறியதாகக் கவிஞர் எழுதியுள்ள இடத்திற் காதலின் வெற்றியை உள்ளவாறு படம் பிடித்துள்ளார். மேலும், செல்வி "இரதமும் தேரும் வடத்தினால் இழுப்பர்; என்னை மடலினால் இழுத்தாரே!" என்று காதற் கடிதத்தைப்பற்றித் தனக்குட் பேசி, தன் கருத்துக்கள் அனைத்தையும் சுருக்கமாகச் சில வரிகளில் எழுதி அனுப்பினாள் என்று காட்டுகின்றார். அவ்வரிகள் இரண்டுதான் ஆனாலும், இரண்டாயிரம் வரிகளை ஒத்த சிறப்புடையவை. அவை இவை:- "என்ன நான் எழுத அன்பே! இருக்கிறேன் சாகவில்லை." 'செல்வியோ அரும்பு; கொஞ்சிச் சிரித்திடும் சின்னச் சிட்டு; கொல்லையில் மண்ணைவிட்டுக் குதித்தெழும் கொத்து மல்லி" என்றும், "சரி எனத் தலை அசைத்தான், சதிரென ஆடிச் சென்றாள்" என்றும், அவர் அமைத்துள்ள வருணனைகள் சலிப்புத் தராத வருணனைகள் ஆகும். இக்காலக் கவிஞர்கள் புதுப்புது உவமைகளைக் கைக்கொள்வதால் நம்மை மகிழ்வித்தல் இயலும் என்பது 20, 44, 46 ஆகிய எண்ணுள்ள கவிகளில் வரும் உவமைகளால் வலியுறும். 74-ஆம் செய்யுள் போன்ற செய்யுட்களின் நடை பழைய சீவக சிந்தாமணி நடை போன்றதாக அமைந்திருக்கிறது. தாயன்பைப் போற்றுஞ் செய்யுட்களாக அமைந்த 86, 87, 88 எண்ணுள்ளவை இக்காவியத்திலேயே ஒரு மணிமுடி போல அமைந்தவை. செய்யுள் 96, 100, 101, 102 ஆகியவற்றைப் படிக்கின்ற எவரும் உள்ளம் உருகாது செயற்படாது இருக்கமாட்டார்.

கருத்தொருமித்த காதலர் இருவர் மணஞ்செய்துகொள்ள முடியாமற் போயிற்று என்பதைக் காட்டுகின்ற இக்கவிதையில் உலக இயல்புகள் பல உள்ளவாறே எடுத்து ஓதப்பட்டுள்ளன. இந்தக் காலத்தின் கண்ணாடிகளில் ஒன்றுபோல அமைந்த இக்கவிதையை மனமாரப் பாராட்டுகிறேன்.

கவிஞர் சிவனடியான் மென்மேலும் சிறந்த கவிதைகளால் தமிழ் மக்களைப் பெரிதும் இன்புறுத்துவார் என எதிர்பார்க்கிறேன்.

அண்ணாமலைநகர்
31—7—57

அ. சிதம்பரநாதன்

# அணிந்துரை

"வான்மதி" யின் ஆசிரியர் திரு. பெரி. சிவனடியான் அவர்கள் வயதில் இளைஞர், ஆனல் வாழ்வியல் கவிஞர் அவருடைய இன்றமிழ்க் கவிதைகள் இனிக்கும் வெல்லக். கட்டிகள். இதற்குமேல் எழுதுவது எனக்கு மிகையாகத் தோன்றுகிறது. நண்பர் என்ற முறையிலே அல்ல, சுவைஞன் என்ற முறையிலே கூறுகிறேன். அவருடைய கவிதைகள் எவரையும் ஈர்க்கும் தன்மையன—எளிமை நிறைந்தன. ஆனல் உப்புச் சப்பற்ற வெள்ளைக் கவிதைகள் அல்ல. குறிப்பாக அவருடைய காதற் கவிதைகள் எல்லார் உள்ளங்களையும் இனிக்கச் செய்வன. இது என்னுடைய முன்னுரையோ அல்லது அவரைப்பற்றிய முழு உரையோ அல்ல; எம்முடைய அணிந்துரை. அவர் என்றென்றும் கவிதை உள்ளத்தோடு வாழ வாழ்த்துகிறேன்.

சிதம்பரம்
28—7—57

அன்பன்
**P. C. தியாகராச பிள்ளை**

# என்னுரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமைந்த என்னுடைய கல்லூரி வாழ்வு என்றும் மறக்க முடியாதது. கிடைத்தற்கரிய பல நண்பர்களையெல்லாம் பெற்றுப் பிரிந்தேன். அவர்களில் நண்பர் திரு. கோ. பசுநாதன் அவர்கள் எமது உளமறிந்து பழகியவர். அவரால் அறிமுகம் செய்யப்பட்டு, அரிதின் அடைந்த நண்பர்தான் "வான்மதி" ஒளியிட வாய்ப்பளித்த, புதுப்பேட்டைப்பிள்ளை என்றழைக்கப்படும் பெருநிலக்கிழார் உயர்திரு. P. C. தியாகராச பிள்ளை அவர்கள். சிதம்பரத்தில் வாழும் இவர், செந்தமிழ்க் கவிதைகளைத் தேனெனச் சுவைப்பவர். உண்மையிலேயே கள்ளும், கன்னியும், கவிதையும் ஒரே வகையான போதைப் பொருள்கள் என்று கூறுவதை, அவர் கவிதைகளைச் சுவைக்கும் காதல் வேட்கையின் மூலந்தான் மெய்யென்று கண்டேன். அவரை எம் நண்பர் என்று கூறுவதைவிட, எம் கவிதைகளின் காதலர் என்று கருதுவதே எமக்குக் களிப்பைத் தருகிறது

"வான்மதி" வெளிவரக் காரணமாயிருந்ததே எம்முடைய கவிதையொன்று தான். எதிரெதிரே உட்கார்ந்து கொண்டு எம்முடைய கவிதைகளைப் பாடச் சொல்லிச் சுவைப்பார். ஆனல் அது ஆணையாக இருக்காது. அன்பின் தூதாக அமையும். உள்ளுணர்வோடு ஒன்றிக் கேட்கும் ஒருவரிடம், எழுத்தாக்கங்களை, எழுதியவனே இயம்புவது எவ்வளவு இன்பம் பயக்கும் என்பதை அங்கேதான் அறிந்தேன். அதே முறையில் ஒரு நாள் "வாழ்க்கை" என்ற இதழின் ஆண்டு மலருக்கு யாத்த "அமைதி கொள்வேன்" என்ற பாடலைப் படிக்கச் சொன்னார். பாடிக்காட்டினேன். இழந்த காதலைப்பற்றிய அப்பாடலை என்னைக் கண்டபோதெல்லாம் சொல்லிச் சொல்லிச் சுவைத்தார். அதன் கடைசிப் பாடலின் கருத்தமைய ஒரு சிறு காவியமே சமைக்கலாம் என்றார். சுவைக்கும் போக்கில் சொன்ன

# காணிக்கை



பெரி. விசாலாட்சி

இளமையிலேயே துன்பத்தீயில் வீழ்ந்து இன்றும் எனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் என் அன்புத் தெய்வமான அன்னையாரின் பொற்பாதங்களுக்கு இந்நூலினைப் பூவாகச் சூடுகிறேன்.

சொல்லல்ல அது. சொல்லைச் செயலாக்க வேண்டுமென்று என்னைத் தூண்டவும் தொடங்கினார். சில நாட்கள் சுறுசுறுப்பின்றி நான் சோம்பிக்கிடந்தும் விடவில்லை என்னை. தொடங்கினேன் எழுத. கவிதை வானிலே "வான்மதி" இப்போது ஒளியிடுகிறது. அந்த ஒளி வெள்ளத்திலே அன்னாரின் உருவைக் காண்கிறேன். உளம் நிறைந்த நன்றி கூறுகிறேன்.

என்னுரை என்ற பகுதியிலே இச்சிறு காவியம் உருவாக இருந்த நிகழ்ச்சிகளைக் கூறாமல் வேறு எழுத என்ன இருக்கிறது? கதை நிகழ்ச்சிகளோடு கவிதைச் சுவையும் குறையாமல் ஆக்க முயற்சித்திருக்கிறேன். முயற்சியில் வெற்றியா? தோல்வியா? என்பதை நீங்களல்லவா கூற வேண்டும்! என்னுடைய முதற் கவிதை நூலை உங்கள் கரங்களிலே சேர்க்கும் போது, ஒன்றை மட்டும் அன்புடன் சொல்லி வைக்கிறேன். கவிதை நூல்களைப் படிக்கும் போது மட்டும், மனம்விட்டுச் சிறிது வாய் விட்டும் படியுங்கள். அப்பொழுதுதான் எந்தக் கவிதைக்குமுரிய தனியழகைக் காணமுடியும். கவிதை இசை வடிவானது. கதையைப் போலக் கருத்தால் மட்டும் சுவைக்கக் கூடியதன்று. குரலால் மீட்டிக் கொள்ள வேண்டிய ஒலியின்பம் கொள்ளையுண்டு அதிலே. அதனால் "வான்மதி" யையும் வாய்விட்டுப் படியுங்கள்.

மேலும் எம் பேராசிரியர் செந்தமிழ்க்காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார், எம். ஏ. பி. எச் டி. அவர்கள் "வான்மதி" க்குச் சிறந்ததொரு மதிப்புரை வழங்கியுள்ளார்கள். அப்பெருமகனாரின் மதிப்புரை "வான்மதி" யை அணி செய்கிறது. என்னை வளர்க்கிறது. அன்னார்க்குப் பணிவன்புடன் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூலினை அழகாக அச்சிட்டுதவிய திரு. அரு. சொக்கலிங்கம் அவர்களுக்கும், திரு. குமா. சுப்பிரமணியம் அவர்களுக்கும் ஓவியம் தந்த நண்பர் திரு. அய்க்கண் அவர்களுக்கும் நான் என்றும் கடப்பாடுடையேன். வணக்கம்.

புதுவயல்
3—8—57

**பெரி. சிவனடியான்**

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

## உறுப்பினர்கள்

இனியன் — கதைத் தலைவன்

செல்வி — கதைத் தலைவி

அன்பன் — தோழன்

நிறைமதி — தோழி

சோலை — தலைவியின் தாய்

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# வான்மதி

## இயல் 1

### தெருவில்

---

வானமே திரண்டு பூமி
வருவதைப் போன்றே அந்நாள்
கானமாயிசைத்த தூரல்
கடுமழை யாகி எங்கும்
கானகக் குருவி மக்கள்
கலந்தன ; கழனி நோக்கிப்
போனவர் இல்லம் காணப்
பெரும்பொழு தாயிற் றன்று . 1

சிறுமழைத் தூர லென்று
சிரிக்கிறார் நம்மை என்றே ;
ஒறுத்திட எண்ணங் கொண்டோ,
உரக்கவே சிரித்த தன்று ;
கறுமனம் பூண்டு நீரைக்
கடலென மண்ணிற் கொட்டி
நிறுவிய பெருமை என்ன ?
நிலமெலாம் வெள்ளக்காடே . 2

ஏரிகள் உடைந்த தெண்ணி
ஏங்கினார்; சேரி மக்கள்
கூரைகள் பிரிந்து குட்டிச்
சுவரென்றார்; குடில்களெல்லாம்
ஊரிலே பயிரொன் றில்லை
உயிரினிப் பாழே என்றார் ;
நேரிலே கடலைக் காண
நேரார்க்கு வாய்ப்பே அன்று . 3

தடமெலாம் மரங்கள் ; சாலைச்
சரிவெலாம் உடைப்பு ; மக்கள்
உடம்பெலாம் குளிர்ந டுக்கம் ;
உளமெலாம் தீயின் பாய்ச்சல் ;
இடமெலாம் குளங்கள் ; அங்கே
இரைச்சலோ தவளைக் கூச்சல் ;
நடக்கவே முடியா வாறு
நல்லஅவ் ஊரே தீவு . 4

அளவினை மீறுங் காலை
அழிவதே உறுதி என்ற
உளந்தரும் நீதி தன்னை
உலகெலாம் அறியத் தானோ ,
வளந்தரப் பெய்யும் வானம்
வழிந்தது கொடிதாய் அன்று ;
தளமெலாம் வலிவு குன்றத்
தரையெலாம் சேறா யிற்று . 5

நெருப்பினை மூட்டிக் காய்ச்ச
நினைக்கவும் முடிய வில்லை ;
பருப்பினில் நெய்யைச் சேர்த்துப்
பால் பழம் உண்ட பேரும்
உருப்படியாக வொன்றும்
உண்ணவும் முடிய வில்லை ;
தெருவினில் பிச்சை யேற்றுத்
திரிந்தவர் செத்தே போனர் . 6

அடுத்த நாள் நிற்கு மென்றார் ;
அய்யய்யோ ! அதுவுமில்லை ;
கெடுத்தது புயலே மிஞ்சிக்
கிடந்தசில் குடிலைக் கூட ;
கொடுத்ததே அமைதி மூன்றும்
நாளெனக் கொள்ளல் போதும் ;
படுத்தஅக் கதிரோன் மீண்டான் ;
பாரில் சிற் றொளியைத் தந்தான் . 7

ஊரிலே அங்கு மிங்கும்
ஒவ்வொரு தலையாய்த் தோன்றும் ;
பாரிலே இந்நாள் காறும்
பார்த்திடாக் கொடுமை என்று ,
நேரிலே கண்டு சில்லோர்
நெடியமூச் செறிந்தார் ; வாழ்வை
வாரியே கொண்டு சென்ற
மழையிது மழையென் றாரே . 8

கொட்டிய மழைநீர் செய்த
கொடுமையை அறிய லாற்ருக்
கட்டினும் அடங்காச் சின்னக்
கருவிழிக் குழந்தை யெல்லாம்
விட்டில்போல் வெளியே வந்து
வேடிக்கை பார்க்கலானர் ;
கட்டிடம் தெருவில் கட்டிக்
களிக்கவும் எண்ணங் கொண்டார் . 9

உடலுழைப்(பு) ஏழை சிந்தும்
உதிரத்தில் சேர்வ தைப்போல்
படர்ந்தவான் நீரும் மண்ணில்
பரவியே கலந்த தங்கே .
இடத்தினைத் தேர்ந்தெ டுத்தே
எழுப்பிட மணலின் வீட்டைத்
திடத்துடன் **இனியன்** என்னும்
சிறுவனும் ஓடி வந்தான் . 10

இனியனே சிறுவ ஞகை
இருப்பினும் இனிய சொல்லான் ;
கனிந்தவாய்ச் சிரிப்பின் மிக்கான் ;
கலையொளிர் முகத்தைப் பெற்ருன் ;
பனிதரு வெள்ளை முத்துப்
பல்லினைத் தெரியக் காட்டித்
தனியனய் ஓடி வந்தான் ;
தயங்கினன் துணைக்காள் சேர்க்க . 11

ஈரமண் வீடு கட்டி
இல்லத்து ராணி யாக்க
யாரை நான் தேர்வே னென்று
நடத்தினன் ஆய்வை நெஞ்சில் ;
" பாரடா என்னை " என்று
பதிலுரைத் திடுவாள் போலச்
சீரணி உடைகள் தாங்கிச்
செல்வியோ எதிரில் நின்றாள் . 12

செல்வியோ அரும்பு ; கொஞ்சிச்
சிரித்திடும் சின்னச் சிட்டு ;
கொல்லையில் மண்ணை விட்டுக்
குதித்தெழும் கொத்து மல்லி ;
நெல்தரும் நாற்று ; நெஞ்சில்
நிலைத்திடும் திருத்தம் ; சிற்பம் ;
தொல்லையை நீக்கும் பேற்றில்
தோற்றவர்க் கவளின் தோற்றம் . 13

செல்வியைக் கண்டான், ஆகா !
சேர்ந்தது துணைக்காள் என்று
முல்லையை வாடச் செய்தான்
முகிழ்த்தஅச் சிரிப்பி னாலே ;
செல்வியே ! வருகி றாயா ?
சேர்ந்துநாம் வீடு கட்டி
நல்லதோர் குடித்த னத்தை
நடத்தலாம் இங்கே என்றான் . 14

வருகிறேன் ; ஆனால், என்னை
வளர்த்திடும் தாய்பாற் சென்றே
ஒருமுறை உன்னுடன்நான்
ஒன்றியே விளையா டற்குத்
தரும்அனு மதியை வாங்கிச்
சட்டென வருவேன் என்றாள் ;
“ தெருவிலே எவரோ டும்நீ
சேராதே” என்றாள் நேற்று . 15

இதற்கெலாம் தாயா ? என்ன
இளித்தவாய்த் தனம்பா ரென்றான் .
எதற்கெலாம் பின்னே ? நின்னும்
இட்டலி பொடிக்குத் தானா ?
முதலிலே தாயைக் கேட்பேன் ;
முடிந்ததும் உன்னோ டிங்கே
விதவித ஆடல் பாடல்
விளைத்திட வருவேன் என்றாள் . 16

சரியெனத் தலைய சைத்தான் ;
சதிரென ஆடிச் சென்றாள் ;
உரியநற் பதிலைக் காண
உளம்பதைத் தேங்கி நின்றான் ;
பரியெனத் தலைநி மிர்த்திப்
பறந்தவள் வந்தாள் சொன்னாள்
“ சரிசரி வீட்டைக் கட்டு
சரிந்திடா வண்ணம் தங்க .” 17

காலிலே மண்கு வித்துக்
கட்டினன் நொடிக்குள் வீடு ;
கோலினல் வேலி கட்டிக்
கொல்லையை அமைத்தான் ; அங்கே,
பாலினைப் பழிக்கும் பன்னீர்ப்
பூவையே பதியம் போட்டான் ;
தாலியை ஓட்டில் செய்து
தரித்தனன் செல்விக் காங்கே . 18

பெண்ணெனக் குனிந்தாள் காதற்
பெருமையை அறியா மொட்டு .
" பெண்களோ சமைத்துப் போடப்
புரிகிறுர் மணத்தை ", என்ற
உண்மையை மட்டும் கண்ட
உலகினை அறியாச் செல்வி
கிண்கிணி ஆடச் சோற்றைக்
கிழிஞ்சலில் ஆக்கி இட்டாள் . 16

செல்விகை இட்ட மண்ணைத்
தித்திக்கி தென்றெ டுத்துக்
கல்விற்குப் பிரசா தத்தைக்
காட்டின மாற்று தல்போல்,
ஒல்லையில் உதட்டோ ரத்தே
உயர்த்தியே தாழ்த்தி யுண்டான் .
எல்லையில் இன்பம் கண்டாள்
எழில் மலர்ச் சிறுமி செல்வி . 20

செல்வியோ(டு) இனியன் கண்ட
சிறந்தஇல் லறத்தைக் காண
மல்லிகை தலையிற் சூடி
மடக்கிய சடைஇ ரண்டை
மெல்லிய துணியாற் கட்டி
மிளிர் நிறை மதியும் வந்தாள் ;
செல்விக்குத் தோழி அன்னள் ;
சென்றோடி வரவேற் கின்றாள். 21

தோழியைக் கண்டு கூடித்
துள்ளினாள், மண் சோறிட்டாள்,
கோழியைக் கண்டு குஞ்சு
குலவிடும் தன்மைபோல ;
"வாழிய குடும்பம்" என்று
வாழ்த்திய மதிஆ ராத்தி
தாழியின் உடைந்த சில்லில்
தனித்துநின் றெடுக்கும் போது, 22

அன்பனும் வந்து சேர்ந்தான் ;
ஆருயிர் இனியன் தோழன்.
"என்னடா? மணவி ழாவா?
எனக்கழைப் பில்லை ஏனோ"?
என்றனன் ; "வாடா நண்பா
எதிர்பாரா விதத்தி லின்று
முன்னறி விப்பே யின்றி
முடிந்தது மணமே" என்றான். 23

உண்ணவா ! முதல்வி ருந்தே
உனக்குத்தான் என்ருன் ; அன்பன்
"கண்ணிலே மண்ணைத் தூவிக்
காரியம் சாதிக் கின்ருய் ;
உண்டவன் முதலில் நானு ?
உப்பிய மதியே என்ருன் .
பண்ணிய உணவில் மீதம்
பாத்திரத் துண்டா பார்ப்பாய் !" 24

நிறைமதி சிணுங்கி நெஞ்சம்
நீள்துடிப் படையச் சொன்னுள் ,
குறையின்றி உன்வ யிற்றில்
கொட்டிட மிச்ச முண்டு ;
அறைக்குவா படைப்பாள் செல்வி
என்றனள் அறைவாள் போல ;
முறைக்குமுன் குணங்தெ ரிந்தே
மூட்டினேன் கலகம் என்ருன் . 25

நால்வரும் சுவைத்தார் ; நல்ல
நகைச்சுவைத் துணுக்கைக் கேட்டு
வேல்விழி நான்கும் மெள்ள
விரிந்தன மல்லி யைப்போல்.
கோலிக்கண் என்ருன் அன்பன் ;
கொல்லெனச் சிரிப்பு மேலும் ;
கால்தரை பட்டி டாமல்
கலைந்தோடி மறைந்தார் இல்லம் . 26

# இயல் 2

## பள்ளியில்

பறந்தன ஆண்டும் ; நால்வர்
பள்ளிவாழ் பருவ மானார் ;
கறவையின் கன்றாய்த் துள்ளிக்
களித்தநாள் எண்ண லானார் ;
உறவினில் புதுமை தோன்ற
உருவினில் வளர்ச்சி கொண்டார் ;
சிறப்பெனில் அவர்கள் சிந்தும்
சிரிப்பினில் பொருளும் கண்டார் . 27

பாவாடை போதா தென்ற
பருவத்தின் குறியால் , இந்நாள்
காவாத இடத்தைச் சேலைக்
கட்டுக்குள் மறைத்தாள் செல்வி .
கூவாத மயில்குஞ் சாகக்
குளிர்புனல் நாண லாக
நாவாட அஞ்சி யஞ்சி
நடந்தாடிச் செல்கின் றாளே . 28

இனியனைக் காண்பாள் ; நெஞ்சம்
இனித்திட அழைக்கத் தூண்டும் ;
கனிந்திடும் பருவம் ; உள்ளக்
கதவிற்குத் தாளைப் போடும்
முனிந்திடும் ஆவல் ; ஆனல்
முறித்திடும் சுற்றச் சார்பு ;
தனியளாய் நிற்பாள் ; கொஞ்சம்
தாயையும் நினைத்துப் பார்ப்பாள் . 29

பருவமே பருவம் ; வாழ்வின்
படைப்பிலே உச்சிக் காலம் ;
உருவினைத் தானே தொட்டும்
உவந்து நாம் கொஞ்சும் காலம் ;
தெருவிலே விழிகளெல்லாம்
தின்றிடப் பார்க்குங் காலம் ;
வருவிதம் எண்ணிப் பள்ளி
மரத்தடி நிற்பாள் செல்வி . 30

இனியனில் மனமிருக்கும் ;
இமைகளோ திறக்கும் ; மூடும் ;
குனிந்திட இயற்கை கூறும் ;
குவளைக்கண் வழியைப் பார்க்கும் ;
சனியனைத் தோன்றும் பக்கம்
சார்ந்திடும் தோழி ; சேலை
நுனியினை விரலால் சுற்றி
நிலத்தினைக் காலால் தேய்ப்பாள் . 31

என்னதான் எண்ணி யெண்ணி
எங்கினும் , பள்ளி வாழ்வு ,
மன்னனை நெருங்கி , நெஞ்ச
மலரினை விரித்துக் காட்டி
அன்பெனும் தேனைக் கொட்ட
அமைத்தது தடையை ; மேலும்
கன்னியும் சிறுமி தானே !
கழறிடத் துணிச்சல் இல்லை . 32

இனியனும் அறிவான் , தன்னை
எண்ணியே சோர்ந்தா ளென்று ;
தனியனாய் வருவான் ; பேசத்
தயக்கமேன் எனந டிப்பான் ;
தினையள(வு) இடம்கி டைத்தால்
திரட்டலாம் இன்ப மென்னும்
நினைப்பினில் நிற்பான் ; பார்ப்பான் ;
நெட்டுயிர்த் தில்லம் சேர்வான் . 33

பள்ளியின் அரங்கில் தோன்றிப்
பாடுவான் ; சுவைப்பாள் ; பேசிக்
கொள்கையை மேடை ஏறிக்
கொட்டுவான் ; உணர்வாள் ; வேடம்
கள்ளனைப் போலும் தாங்கிக்
காட்டுவான் ; சிரிப்பாள் ; இன்பம்
கொள்ளைதான் என்றிட் டாலும்
கூசுவாள் பேச மட்டும் . 34

பள்ளியின் விழாவில் தோழன்
பண்புசேர் அன்ப னுக்குப்
புள்ளிமான் இட்ட பட்டுப்
புடவையை இடுப்பில் கட்டித்
துள்ளியே மகிழும் வண்ணம்
தோன்றிடும் மணப் பெண் ணாக்கி
கள்மலர் மாலை சூட்டிக்
காட்டுவான் பழைய வாழ்வை . 35

தெருவினில் வீடு கட்டித்
திரிந்தநாள் காலந் தொட்டே
ஒருவித மாறு பாடும்
உளத்தினில் கொண்டி டாமல்
அருமையாய் வளரும் வாழ்வை
அகத்தினில் காண்பாள் செல்வி ;
கருவினில் ஊறும் எண்ணம்
கைகூடக் கனவு காண்பாள் . 36

இனியனும் அப்ப டித்தான்
எண்ணினன் ; ஏங்கி நின்றான் ;
எனினுந்தாய் ஆணை வந்தே
இடையிலே நெருப்பை மூட்டிப்
பனுவலை எரித்துப் பாழாய்
ஆக்குமோ எனப்ப யந்தான் ;
முனிவனாய் வாய்கை பொத்திப்
பள்ளிநாள் முழுதும் காத்தான் . 37

செல்வியின் இளமை எண்ணம்
செப்பிய அன்பைக், காதல்
வல்லமை என்றே எண்ணும்
வயதிற்கும் வந்து சேர்ந்தார்.
தொல்லையில் இன்பம் காணும்
சுகத்தினைக் காதலென்று
சொல்லாமற் பேசிடாமல்
பள்ளியைத் துறந்து சென்றார். 38

## இயல் 3

### கல்லூரியில்

---

பள்ளியை விட்டுப் பட்டப்
படிப்பினைப் பெறுவ தற்குத்
தெள்ளிய தமிழ்க் கல்லூரி
சேர்ந்தனர் இரண்டு பேரும்;
கொள்ளியை நிகர்த்த ஊரார்
கண்களை குறுக்கி டாமல்
புள்ளினம் போற்ப றந்து
புதுமையைக் காண வந்தார். 39

கண்டனன் முதல்நாள்; ஆகா!
காரிகை "வணக்கம்" என்றாள்.
கொண்டனன் நடுக்கம்; என்ன!
கூறுதல் செல்வி தானா?
விண்டது தலையே! மூளை
விரிந்தது வியப்பால்! பள்ளிப்
பண்டையப் பயந்தான் எங்கோ
பறந்தது; "வணக்கம்" என்றான். 40

இருமணித் துளிகள் ஒன்றும்
இருவரும் பேச வில்லை ;
வருகிற சொற்க ளெல்லாம்
வாயுடன் அடைத்துப் போக
ஒருவரை ஒருவர் பார்த்தார் ;
உளத்தினைத் திடப்ப டுத்தி
"திருமதி ! படிப்ப தென்ன ?
செந்தமிழ்த் துறையா ?" என்றான். 41

ஆமெனத் தலைய சைத்தாள் ;
அகிலமே ஆடிற் றங்கே ;
" தாமெது ?" என்றாள் ; பாரின்
சரித்திரப் பாட மென்றான்.
"ஊம்" எனும் போதோ அங்கே
உதிர்ந்தன பாண்டி முத்து !
போம்எனச் சொல்வார் யாரோ !
பிரிந்தனர் விடையே யின்றி. 42

அடுத்தநாள் அடடா ! அந்த
அழகுடை யாருக் காக ?
தடுப்பவர் யாரோ ! ஆடை
தரிப்பதில் பிழைதான் என்ன ?
படித்திடும் படிப்போ பண்பைப்
பொறுப்பினைப் பரப்பும் நெஞ்சில் ;
கெடுதலை எண்ணார் ; அன்பு
கிட்டவே அரண்அ மைப்பார். 43

வகுப்புகள் முடிந்த தென்ற
மணியொலி கேட்கும் போது
தொகுப்பு நூல் ஆகும் நெஞ்சம் ;
தள்ளியே வருவர் வீதி ;
மகுடிதான் யாரோ ! கேட்டு
மயங்குவார் யாரோ ! என்று
புகுந்திடும் ஐயம் , அன்புப்
புதிரினை அறியார்க் கெல்லாம் . 44

நூலகம் செல்வர் ; ஆனல் ,
நுழைந்தொரு புத்த கத்தைக்
காலமும் தேடு வார்போல்
கண்களைச் சுழல விட்டு
வேலையைக் கெடுப்பர் ; வீதி
வந்ததும் அவர்வி ரும்பும்
நூலது கையி ருக்கும்
நொடியினில் கொள்ளைப் பேச்சு. 45

போட்டிகள் நடக்கும் ; பேசப்
புகுந்திடில் மாற்றார் அங்கே ;
நாட்டினில் எதிர்க்கும் கட்சி
நலஞ்செயும் என்ற கொள்கை
காட்டிட முந்து வாள்போல்
காளையை எதிர்க்க ஆங்கே
பூட்டிய பெண்கு லத்தின்
புரட்சியாய் வருவாள் மேடை . 46

மேடையில் மாற்றார் ; நெஞ்ச
மெத்தையில் உறவோர் ; அன்பின்
ஓடையில் துள்ளும் மீன்கள் ;
உயிரினில் கலந்த நண்பர் ;
கோடையின் குளிர்ச்சி ; அன்னார்
கூறிடும் சொற்க ளெல்லாம்
பாடையும் பிரிக்கா தென்ற
பான்மையை வளர்க்கும் ; தேக்கும் . 47

ஆயிரம் வகையில் அன்பை,
அறிவினைப் , பண்பை , வாழ்வைப்
பாயிரம் எழுது வார்போல்
பகுத்தறிந் துணர்ந்த பின்பே
தோய்ந்துள நோய்க்குக் காதற்
சூரணம் கொடுக்க லானார் .
ஆயினும் கலையின் வாழ்விற்
கழிவில்லை ; தடங்க லில்லை . 48

பார்த்திடா நாட்க ளில்லை
பண்பொடு ; விலங்கா யில்லை ;
ஆர்த்தெழும் மனத்தால் , அன்னார்
அறிந்திடா நுணுக்க மில்லை ;
சேர்ந்தவர் விடுமு றைக்குச்
சென்றநாள் கொஞ்ச மில்லை ;
தேர்ந்தனர் நெஞ்சில் ; கல்வி
தீர்ந்ததும் மணமே திட்டம் . 49

தமிழினை முடித்தாள் செல்வி ;
சரித்திரம் இனியன் பெற்றான் ;
அமிழ்தெனில் தமிழ்தான் என்றாள் ;
அரசியல் சரிதம் என்றான் ;
இமையினை இறுதி யாக
இணைத்திடும் வரைக்கும் நெஞ்சில்
அமையும்கல் லூரி வாழ்வை
அழுதிடாக் குறையால் விட்டார் .

## இயல் 4

### சோலையில்

மனிதனைப் பழிக்கும் போது
"மரம்" எனச் சொல்வர், காவின்
தனிச்சுவை அறிந்தார் யாரும்
சாற்றிட மாட்டார்; காட்டில்
முனிவனும் வாழ்ந்தான் என்றால்
மோட்சமே மரமாய்க் கண்டான்;
இனியனும் மரத்தின் கூட்டம்
இனித்ததால் சோலை வந்தான். 51

காலையில் தலையை நீட்டும்
கதிரவன் நுழையான் அங்கே;
சாலையில் செல்வோர் தங்கத்
தழைகளால் அமைந்த கோட்டை;
வேலையில் லாமல் காதல்
வேண்டிய மட்டும் கொள்ளச்
சோலையில் கோடிப் புட்கள்
தொல்லையை எவர்க்கும் நீக்கும். 52

செல்வியும் அங்கே வந்தாள்
சிந்தனை அமைதி காண ;
கல்வியும் பண்பும் வாழ்வில்
கைகுலுக் கிடுதல் போல
எல்லியும் கனவும் தானே
இணைந்திடல் போலே , ஆங்கே
செல்வியும் இனியன் தானும்
சேர்ந்தனர் ஓரிடத்தில் . 53

கல்வியை முடித்தோம் என்ற
களிப்பினில் திளைத்தார் ; காதல்
தொல்லையை நீக்க எண்ணித்
துடித்ததில் தவறே இல்லை .
கொல்லையில் வளர்ந்த மல்லிக்
கொடியென நின்ற செல்வி
நெல்லுமி விலக நீளும்
அரிசிபோல் சிரித்த நேரம் 54

இனியனும் சிரித்தான் ; ஒன்றாய்
இணைந்தன கண்கள் நான்கும் ;
கனியது கையி ருக்கக்
கடித்திட அட்டி என்ன !
தனிமையில் உண்மை எண்ணம்
சாற்றிட அச்சமென்ன !
குனிந்தவள் நிமிரு முன்னே
குழைந்தவன் " அன்பே " என்றான் . 55

செல்வி யென் றழைத்த ஏறு
செப்பிய " அன்பே " என்ற
சொல்லினைத் தின்றாள் ; மார்பைத்
துளைத்தது ; அவளும் " அன்புச்
செல்வனே " என்ன என்றாள் ;
திரும்பவும் " அன்பே " என்றான் .
சொல்லுக எண்ணம் " அன்பே "
சுழலுதென் நெஞ்ச மென்றாள் . 56

மண்ணிலே வீடு கட்டி
மங்கையே தாலி யிட்ட
எண்ணந்தான் நினைவி லுண்டா ?
இருந்திடில் " அத்தான் " என்று
நண்ணியே ஒருமு றைதான்
நாவழைத் திடுமா செல்வி ?
கண்ணிலே ஒளியுண் டென்றால்
கன்னிநீ வந்தால் உண்மை . 57

அன்பெனும் சுரங்கம் தோண்டி
அதிலிருந் தெடுத்த தங்கம் !
இன்பமே ! இலக்கி யத்தில்
எழுதிய தலைவா ! பண்பே !
பன்மலர்த் தேனே ! காவில்
பரவிடும் மணமே ! அத்தான் ! "
சொன்னவள் குழந்தை போலத்
துவண்டவன் கரத்தில் வீழ்ந்தாள் . 58

எந்தினான் ; அமர்ந்தான் ; இன்ப
எட்டினைத் திருப்பலானான் .
ஆந்தைபோல் பார்க்கத் தீய்க்க
யாருமே அங்கே இல்லை .
ஓந்திபோல் தலையைத் தூக்கி
ஒண்டியே பார்ப்பா ரில்லை .
சாந்தியே சாந்தி காதற்
தளத்திலே தனிமை இன்பம் ! 59

இலக்கியச் சுவையே ! சங்கம்
இருந்தபொற் றமிழே ! எந்தன்
வலக்கையே ! விரலில் சேர
வார்த்தமோ திரமே ! மாதர்
குலத்தின்மா மணியே ! தங்கக்
குத்துவி ளக்கே ! வெள்ளிக்
கலத்தினில் சேக ரித்த
கனிகளின் கலப்பே என்றான் . 60

இயற்கையின் வனப்பில், பூத்த
எழில்மலர்க் காட்டில் , சாதிப்
புயலிலா புதரோ ரத்தே
புகுந்தது காதற் தென்றல்
நயமெலாம் தமிழிற் கண்ட
நங்கை , இப் பொழுது காளைப்
புயத்திலும் இன்பம் கண்டாள் ;
பிறவியே பிறவி யென்றாள் ! 61

நிலையினை உணர்ந்தார் ; வந்து
    நேரமும் ஆயிற் றென்றார் ;
வலையினில் வீழ்ந்தார் மீண்டு
    வந்திட வழியைக் காணார் ;
கலையினில் தோய்ந்தார் தாமே
    கண்டிடும் இன்பம் கண்டார் ;
" தொலைவினில் இல்லை , இல்லத்
    தொடக்க நாள் " எனப்பி ரிந்தார் . 62

## இயல் 5

### ஆற்றோரத்தில்

மலையது கல்லாய்ப் போன
மனத்துயர் தாங்கி டாதோ !
கொலையுண்ட கழுத்தில் கொட்டும்
குருதியைப் போலே நீரை
நிலை கொளா விரைவில் எங்கும்
நீளவே செய்த(து) ; ஆனல்
மலைதரும் நீர்ந மக்கு
மனக்குளிர் அளித்தல் கண்டோம். 63

ஆற்றுநீர்ச் சலச லப்பும் ,
அதுவரும் அழகும் , காதல்
ஊற்றினை மிகுக்கும் அங்கே
உலவிடும் காத லர்க்கு .
மாற்றமே காதற் போரில்
மலர்திடில் அவர்கள் வாழ்வைக்
கூற்றமாய் வந்த ணைத்தும்
கொடுங்கடல் கூட்டிச் செல்லும். 64

இன்பமும் ஈயும், வேண்டின்
இறப்பையும் நல்கும் , ஆற்றின்
முன்னரே வந்தாள் செல்வி ,
முழுமணல் மேட்டின் மேலே ;
தன்வர வெண்ணிச் சோர்ந்து
தனித்துள இனியன் தன்னைப்
பின்னரே கண்டாள் ; ஓடிப்
பிடித்தனள் மன்னன் கையை . 65

தையலைக் காண ஏங்கித்
தனித்திருந் தானே யாகில்
மையலைத் தீர்க்க வந்த
மயில்தனைக் கண்ட பின்னர்
பையவா போகும் துன்பம் ?
பறக்குமே பஞ்சைப் போல .
ஐயனின் துயர மென்ன !
அணங்கவள் கலங்க லானாள் . 66

செல்வியைக் குறையி லாழ்த்தச்
செய்திடும் சதியா ? காதற்
கல்வியில் பெண்ணை வெல்லக்
கண்டபுத் துறையா ? இல்லை
தொல்லையே உண்மை தானா ?
சொல்லுக அன்பே ! இன்றே
கொல்லுவோம் துயரை ; இன்பம்
கொள்ளுவோம் என்றாள் செல்வி 67

இன்னமும் பேச வில்லை ;
இமைகளும் ஆட வில்லை ;
சொன்னசொல் ஏற வில்லைத்
தோகையைத் தொடவு மில்லை ;
பின்வரும் பிரிவை எண்ணிப்
பித்தனாய் இருந்த செம்மல்
முன்னைநாள் எண்ணிக் கண்ணீர்
முத்தினை உதிர விட்டான் . 68

சேலையின் தலைப்பால் கண்ணில்
சிந்திய நீர்து டைத்துப்
பாலையின் வெப்பம் கண்டாள்
படர்குளிர் மனத்தி னுள்ளே ;
சோலையில் பத்து நாள்முன்
தோன்றிய மகிழ்வைத் தீய்க்க
மாலையில் நேர்ந்த தென்ன ?
வாய்திறந் துரைப்பீர் என்றாள் . 69

செல்வியே ! கேட்பாய் நாளைச்
செல்கிறேன் கோவை ; உன்பாற்
சொல்லவே வந்தேன் ; அங்கே
தொழிலக ஆலை வேலை
நல்லவர் தலைமை யின்கீழ்
நானடைந் துள்ளேன் ; ஆனால்
உன்னிடம் அடிமையான
உவப்(பு) அதில் வருமா ? சொல்வாய் ! 70

ஆறுதல் படுத்த வந்த
அழகியும் அழுதல் பார்த்து
மாறிய துன்பம் ஓர்ந்தான் ;
மாறிடாக் காதல் கண்டான் ;
ஆறுதல் அவனும் சொன்னன் ;
அமைந்தனள் ; ஆனல், செல்வி
" கூறிட வந்தேன் செய்தி
கொட்டினீர் முதலில் " என்ருள். 71

நிறைமதி பணிசெய் கல்வி
நிலையத்தில் தமிழ்த்து றைக்காள்
குறையுள தென்றெனக்குக்
கொடுத்துளாள் " தந்தி " நேற்று.
முறையொடு விண்ணப் பத்தை
முன்னிலைப் படுத்த, வேலை
நிறைபெறத் தகுதித் தாளும்
நேரிலே கொணர்க என்று. 72

சொல்லவே வந்தேன் ; சொல்லித்
துயர்களைந்(து) ஊக்க நீங்கள்
வல்லவர் எனநி னைத்தேன் ;
வருத்திடும் பிரிவைப் போக்கி
" செல்வியே ! செல்வாய் " என்று
தேற்றுவீர் எனமகிழ்ந்தேன்.
சொல்லுவார் தேற்று வார்யார் ?
துயரிரு வருமே பெற்ருேம். 73

தமிழ்ப்பணி ஆற்ற வேண்டின்
    தையல்நான் பிரிய வேண்டும் ;
அமைந்துள ஆலை வேலை
    அன்பர்நீர் ஏற்க வேண்டும் ;
உமைப்பிரிந் துடல்தான் எம்பால் ;
    உயிரெலாம் உம்பால் என்றாள் .
இமைத்திடல் செய்யான், செல்வி !
    என்செய்வோம் பிரிவோம் என்றான். 7

## இயல் 6

### கடிதத்தில்

கோவையி லிருந்து முத்துக்
கோத்ததைப் போலே , காதற்
பாவைக்கு இனியன் சேர்த்த
கடிதத்தைப் படிக்க லானாள் .
“ கோவையே ! கோவை யில் நான்
கொள்கிறேன் நலத்தை ; எந்தன்
தேவையே ! திருச்சி யில்நீ
சீர்நலம் பெற்றுள் ளாயா ? 75

நரகமாம் சொல்லக் கேட்டேன் ;
நாளிதில் உணர்ந்தேன் ; காதற்
பிரிவினைப் பெற்றார் காணும்
பெருந்துயர் நரகம் என்பேன் ;
விரலினால் மலைய சைப்பான்
வெல்லுவான் உலகென் றாலும்
உரத்தினை இழப்பான் காதல்
ஒட்டிய பிரிவென் றாலே 76

தொழிலகம் துக்கக் கூடம்,
சொல்கிறேன் மிகையே இல்லை;
பழிவரும் என்றஞ் சித்தான்
பார்க்கிறேன் தொழிலை; மெல்ல
நழுவிட எண்ணந் தோன்றும்;
நாணயம் இடித்துக் காட்டும்;
முழுமதி உன்முன் வந்தால்
முனிவதும் எனக்குத் தோன்றும். 77

திருப்பிடும் எட்டி யெல்லாம்
செல்வியுன் உருவே காண்பேன்;
பருப்பினை வடிவில் ஒத்தும்,
பாளையை நிறத்தில் ஒத்தும்,
ஒருங்கமை முறுவ லெண்ணி
உயிர்வதை யுறுவேன்; காதல்
நெருப்பணை கருவி ஒன்றை
நேரமும் அலைவேன் தேடி. 78

ஆலையில் நெருப்பென் றாலோ
அலறுவேன் நெருப்ப ணைக்கும்
வேலையில் உள்ள வர்க்கு;
விரைவரென் முன்னர்; நெஞ்சின்
மூலையில் நெருப்பென் றாலோ
முனைந்தெவர் அணைப்பர்? செல்வி
ஓலையை விடுத்துள் ளேன்நான்;
உதவிநீ செய்ய வேண்டும். 79

மற்றும்நான் அறியச் செய்ய
மடலிலே ஒன்று மில்லை ;
கற்கிறேன் இரவில் ; காலை
கற்றதை மறக்கின் றேன்நான் ;
பெற்றிடும் கடையின் சோற்றால்
பிழைத்துளேன் எனநி னைத்தால்
குற்றமே ஆகும் ; மற்றும்
குறிப்பிடத் தக்க தில்லை . 80

மடலினைப் படித்துச் செல்வி
மயங்கினாள் ! முத்த மிட்டாள் !
குடத்தினில் இன்பம் மொண்டு
கொட்டினார் ! இரதமும் தேரும்
வடத்தினால் இழுப்பார் ; என்னை
மடலினால் இழுத்தார் ! காதற்
கடலினில் வீழ்த்த இந்தக்
கடிதத்தில் ஏற்றிச் சென்றார் . 81

என்றவள் கூறிப் பெட்டிக்
கிடையினில் கிடந்த , அச்சால்
தன்பெயர் பொறித்த வெள்ளைத்
தாளினை எடுத்தாள் ; பேனா
வன்மையைக் காட்ட வந்தாள் ;
வார்த்தையின் சுருக்கத் தாலே
" என்ன நான் எழுத அன்பே
இருக்கிறேன் சாக வில்லை " . 82

என்றவள் முடித்துக் கூட்டில்
இட்டவள், அஞ்சலின்றி
ஒன்றினை எடுத்தாள் ஓட்ட;
உருகினாள்; அதிலே இந்தி;
மன்னனை எண்ணும் போதும்
தமிழினை மாய்க்க முந்தும்
புன்மையைக் கண்டு நொந்து
புழுங்கிப்பின் மடலைச் சேர்த்தாள். 83

# இயல் 7

## சங்கத்தில்

மாதர்கள் சங்கம் ஒன்றால்
பங்கனைத் திருத்த எண்ணி
ஆதர வாளர் சேர்த்தே
அடிக்கடி கூட்டம் கண்டாள்.
மேதகு அறிஞர் சான்றோர்
விடுத்தநற் கருத்தை ஏற்று
மாதரும் ஒருவ ரென்னும்
வரிசையில் பேச லானார். 84

செல்வியின் காலம் வந்து
சேர்ந்தது; "தாயின் அன்பு"
சொல்லிட வந்தே னென்று
துடுக்குடன் அவைக்கு வந்தாள்;
"வல்லமை எல்லாம், பெற்ற
தாயினால் வருவ தாகும்;
புல்லெனும் கோழை நெஞ்சைப்
புலியுள மாக்கும் தாய்மை. 85

தாய்மையை மக்கள் மட்டும்
தனித்துரித் தாக்க வில்லை ;
பாய்ந்திடும் அரிமா, அந்தப்
பண்பிற்கு விலக்கே யில்லை ;
ஆய்ந்திடில் வாயாற் கவ்வி
அணைத்திடும் பூனை , குட்டி ;
ஓய்ந்திடாக் குரங்கு பெற்ற
வயிற்றுடன் குட்டி ஒட்டும் ; 86

காக்கையும் வளர்க்கும் குஞ்சை
இரையினைக் கக்கித் தந்து ;
பூக்களில் வாழும் சிட்டும்
பொறித்திடும் குஞ்சைக் காக்கும் ;
ஈக்களில் புழுக்கள் வாழ்வில்
இருந்திடும் தாய்மை என்றால் ,
மாக்களில் கேடே , தாய்மை
மதிப்பினை அறியா மக்கள் ! 87

தாயினை மறந்தே ஈசன்
தாளினைப் பற்றி என்ன ?
தாயினும் மேலாம் தெய்வம்
தரணியில் மெய்யாய் இல்லை !
கோயிலில் உள்ள தெய்வம்
குருக்களின் வாயே பார்க்கும் ;
தாயெனும் இறையோ நம்மைத்
தாங்கிடும் கரங்க ளன்றோ ! 88

உண்டிட உணவு மின்றி
உடுத்திடத் துணியு மின்றி
ஒண்டிடக் குடிலு மின்றி
உழைத்திட வழியு மின்றி
மண்கலம் ஏந்திப் பிச்சை
வாங்குவாள் கூடப், பெற்ற
கண்மணி அனைய சேயைக்
காவாது விட்ட தில்லை. 89

வாழ்வினில் வளமே இன்றி
வகையிலாத் தாழ்வுற் றாலும்,
வீழ்ச்சியைக் கண்டார் நொந்த
வேதனை யாலே கூறும்
ஊழ்வினை குறுக்கிட் டாலும்,
உயிர்விடும் நிலைவந் தாலும்,
சூழ்ந்திடும் மக்கள் துன்பம்
துடைப்பவள் தாயே அன்றோ! 90

இன்பத்தில் சிரிப்பாள்; மக்கள்
இன்னலில் அழுவாள்; சோர்ந்து
கன்னினால் ஊக்க மூட்டிக்
களைமுகம் காணச் செய்வாள்;
தென்னைபோல் அன்னை; தெங்கின்
தெளிந்தநீர் அவளின் அன்பு
என்றுமே மக்கட் காக
ஈபவள் இறப்ப வள்தாய் 91

பெற்றசேய் கொலையைச் செய்யப்
பிடிபிடி எனப்பட் டாளம்
சுற்றியே பிடித்துத் தூக்கில்
தொங்கிடப் பார்த்தும், " குற்றம்
குற்றமே ; மகனின் சாவு
குடிகளின் வாழ்வே ; " என்று
பெற்றவள் உணர்ந்த போதும்
பெருக்குவாள் கண்ணீர் வெள்ளம். 92

வாழ்வினில் வளமென் றாலோ
வளர்ந்திடும் உறவின் கூட்டம் ;
தாழ்வெனில் ஓடும் ; தந்து
தாங்கிட முன்வ ராது ;
சூழ்ந்திடும் பேதத் தாலே
துறப்பவர் ஐயோ கோடி !
ஆழ்ந்திடில் அன்னை அன்பிற்(கு)
அகிலமே ஈடா காது. " 93

என்றவள் முடித்தாள் பேச்சை ;
எழுந்தகை ஒலியால், மேடை ;
நின்றவள் குளிர்ந்தாள் ; வந்தாள் ;
நிறைந்துள தோழி எல்லாம்
" நன்றுநும் பேச்சு செல்வி !
நன்றடி மிகவும் நன்று !
வென்றிடும் தாய்மை ! நாடு
மீண்டிடும் விரைவில் " என்றார். 94

## இயல் 8

### கூட்டத்தில்

---

மன்னர்முன் கண்ட கோட்டை
மதில்தனைப் போல்உ யர்ந்த
வன்னெடுஞ் சுவரி னுள்ளே
வளர்ந்திடும் ஆலை ; நாளும்
கொன்றிடும் ஆளை ; ஆனால்
கூறுவார் யாரே இந்த
நன்றியில் செயலை ? என்று
நலிந்தனர் தொழிலா ளர்கள் . 95

குன்றெனச் செல்வம் , ஆலை
கொண்டவர் பக்கம் சேரும் ;
குன்றியாய்ப் பணியாள் தேய்ந்து
குறுகுவான் கடுகைப் போல ;
வென்றிடும் காலம் என்று
விடியுமோ ? என்று, கோவை
கன்றிடும் போதே ஆலைக்
களத்தினில் இனியன் நின்றான் . 96

இனியனை அறிந்த ஏழை
ஏந்தல்கள் இருகை கூப்பிக்
கனிமுகம் காட்டி அன்பைக்
காளைமேல் மலராய்த் தூவி
தனியகம் அமைக்க வேண்டும் ;
சட்டங்கள் வகுக்க வேண்டும் ;
இனியரே ! தலைவர் என்றார்
இளைஞனும் ஏற்றுக் கொண்டான். 97

கூட்டிய கழகம் கண்ட
கூட்டத்தில் முதல்நாள் அன்றே
ஈட்டியாய் இனியன் நின்றான் ;
எரிமலை யானான் சொன்னான் ;
" காட்டிடைப் புலியாய் நாட்டில்
காளைகள் மாற வேண்டும் ;
பூட்டிய விலங்கொ டித்துப்
புதுயுகம் காண வேண்டும் ; 98

இரும்புடன் இரும்பாய்த் தேய்ந்தே
என்னதான் கண்டோம் ; ஆலை
வருமானம் எங்கே ன்றோம்,
வாயினை மூடென் றார்கள் ;
துரும்பென மதித்தார் ; ஆனால்
துரும்பதும் சேரச் சேர
பெருஞ்சுமை யாகி அச்சுப்
பிளக்கிடல் அறியார் பாவம் ! 99

ஆலைகள் நிறைய வேண்டும் ;
அருந்தொழில் வளர வேண்டும் ;
சேலைகள் துணிகள் இன்னும்
செய்பொருள் பெருக வேண்டும் ;
மூலையில் செல்வம் மட்டும்
முடங்கிடா திருக்க வேண்டும் ;
ஓலையின் சருகாய் நம்வாழ் (வு)
உலர்ந்திடா திருக்க வேண்டும் . 100

ஓடிடும் கருவி யோடங் (கு)
ஒடிந்திடும் எலும்பும் ஒன்றா ?
கூடிடும் நீரும் , வற்றும்
குருதியும் ஒன்றா ? கூலி
மூடிடும் ஆலைச் சங்கும்
மொய்பசிக் குரலும் ஒன்றா ?
வாடிடும் பயிராய் நாமும் ,
வதைபடல் நன்றா நன்றா ? 101

உழைத்திட உறுதி கொள்வோம் ;
உழைத்திடும் தகுதிக் கேற்பப்
பிழையிலா வகையிற் கூலி
பெற்றிட விதியும் செய்வோம் ;
தழைத்திட நமது வாழ்வு
சங்கங்கள் காண்போம் ; என்றும்
விழைதலில் வெற்றி காண
வெஞ்சமர் வரினும் அஞ்சோம் . 102

ஒரு கரம் ஒலித்தால் ஓசை
உயர்வதே இல்லை; ஒன்றாய்ப்
பெருவாரிக் கரம் முழங்கப்
பிளந்திடும் வானும்; அந்த
ஒருமனப் பண்பே ஓங்கி
உங்களின் சக்தி சேர்ந்தால்
திருடர்கள் வாழ மாட்டார்;
செழித்திடும் நமது வாழ்வு. 103

உழைத்திடும் நமக்குள் சாதி
உயர்வில்லை; தாழ்வு மில்லை;
உழைத்திடும் கூட்ட மென்றால்
ஒன்றெனக் கருத வேண்டும்
பழிப்பவர் தம்மைப் பியந்த
பஞ்சாங்கம் ஆக்க வேண்டும்;
விழிப்பவர் விழித்தால் எய்க்கும்
வீணர்கள் வாழ்வ தெங்கே? 104

இரவெலாம் பகலாய் ஆலை
இயக்கிப்பின் கரத்தை நீட்ட,
தருகிறார் செப்புக் காசை;
தங்கமாய்க் குவித்தார் அங்கே;
பொருமி நாம் அழுதால் "செய்த
பாவம் நீ" என்றார்; கேட்டு
வருகிறோம் நாமும்; நீரிவ்
வஞ்சகம் உணர வேண்டும். 105

வாழட்டும் முதலைப் போட்டார் ;
வாழவும் விடட்டும் நம்மை ;
கோழையாய் இருந்தால் குட்டிச்
சுவராகும் நமது வாழ்வு ;
மோழையும் பாயும் நெஞ்சு
முறிந்தவர் எனத்தெரிந்தால்
தோழரே! சுடர்முகத்தைத்
தூக்குக” எனமுடித்தான். 106

# இயல் 9

## வீட்டில்

முகிலினைக் கொம்பு நோக்க
　　முகத்தினை முன்பின் ஆட்டித்
திகில்தரும் திமிளு யர்த்திச்
　　சிறுமணிச் சலங்கை ஆட்டிப்
புகையெனப் பறக்கும் சோடிப்
　　பூரணிக் காளை பூட்டி
நகைப்பொலி யோடோர் வண்டி
　　நின்றது செல்வி இல்முன் 107

வண்டியின் உள்ளி ருந்து
　　வந்தனர் இரண்டு பேர்கள் ;
பெண்டிரும் ஆணும் சேர்ந்து
　　பெயர்ந்தனர் வீட்டி னுள்ளே ;
வண்டியின் சுமையில் பாதி,
　　வந்துள பெண்தாம் பூண்ட
பண்டைய நகைகள், அன்னார்
　　பரம்பரைச் செல்வர் என்கும். 108

கண்டதும் செல்வியின்தாய்
    கனிமொழிச் சோலை என்பாள்
கொண்டனள் மகிழ்ச்சி; கையைக்
    கூப்பினள், "வாங்க" என்றாள்.
மண்டலம் முழுதும் வாங்கும்
    மதிப்புள செல்வச் சீமான்
அண்டினால் அவளின் வீட்டை,
    அடையாளா மகிழ்ச்சி வெள்ளம்? 109

"வருகிறோம்" மகிழ்ச்சி அம்மா!
    வருகிறோம்" என்று சொல்லிப்
பெருமலை நகர்வதைப்போல்
    பேரிரு உருவம் வந்தே
இருந்தன; சோலை அங்கும்
    இங்குமாய் ஓடித் தட்டில்
தரிக்கவெற் றிலையும் பாக்கும்
    சட்டெனக் கொண்டு வந்தாள். 110

வைத்தவெற் றிலையும் பாக்கும்
    வாழ்வில் நல் எடுத்துக் காட்டாம்
சத்தியப் பொருளு மாகும்"
    சாற்றினேன்" என்றார் செல்வர்.
இத்தனை பொருள டக்கி
    என்னதான் சொன்னார் என்று,
பத்தினில் ஒருபங் கேனும்
    பகுத்தறி யாள் நம் சோலை. 111

நீரினைக் கொண்டு வைத்து
நின்றவள் சொன்னாள், வேலைக்
காரனை அனுப்பி விட்டால்
கடிதில்நான் உங்கள் இல்லம்
நேரிலே வரமாட் டேனா?
நீங்களா வருதல் வேண்டும்?
காரியம் என்ன சொல்வீர்?
கட்டளை ஏற்பேன் என்றாள். 112

நீங்களும் வரலாம்; ஆனால்,
நாங்களே நேரில் வந்து
வாங்கிடும் நல்ல செய்தி;
ஆதலால் வந்தோம் என்றார்.
தேங்கினள் சோலை; சற்றுத்
திகைத்தனள்; என்ன செய்தி?
பாங்குடன் சொல்வீர் என்று,
பயத்துடன் மெல்லக் கேட்டாள். 113

படித்தவன் எனது பையன்;
படித்தவள் உமது செல்வி;
துடிக்கிறான் செல்வி யோடு
தொடங்கிட இல்ல றத்தை;
படித்தவன் படித்த பெண்ணைப்
பார்ப்பதில் தவறு முண்டா?
முடித்திட வந்தோம் பேச்சை;
மொழிக நும் கருத்தை என்றார். 114

உண்மையா ? உங்கள் செல்வ
உயர்வினில் என்குடும்பம்
மண்ணிலும் சிறிய தன்றோ !
மருளுறுதென் உள்ள மென்றாள் ;
கண்ணினும் இனிய எங்கள்
காளையின் மனத்திற் கேற்பப்
பெண்ணினைத் தேர்ந்தெடுக்கப்
பெருமனம் கொண்டோம் என்றார் . 115

துள்ளிய துள்ளம் ; பின்னர்
துணிந்தது மனமும் பேச ;
எள்ளிடும் உலகத் தாரை
எறும்பென மதித்தே, ஏழ்மைக்
கள்ளியைக் கன்ன லாகக்
கருதியே வந்த செல்வ !
உள்ளத்தால் சொல்கிறேன் நான்
உம்மரு மகளென் செல்வி . 116

என்றனள் சோலை : பின்னர்
இருவரும் மகிழ்ந்தார் ; நன்றே
ஒன்றுமக் கியப்ப வேண்டும்
ஓராறு நாட்க ளுள்ளே
என் மகன் மேலும் கல்வி
ஏற்றிட மேலை நாடு
சென்றிடும் முன்னம், நல்ல
திருமணம் முடிக்க வேண்டும். 117

தாயகம் அடுத்த ஆண்டு
        திருப்புவான்; தையலோடு
போயகம் காண்பான் சென்னைப்
        புதுமனைக் கட்டி டத்தில்;
மாயபொன் றிதிலே இல்லை;
        மண முடித்(து) அனுப்பி விட்டால்
தாயக நினைவி ருக்கும்;
        தகுந்தகா ரணமீ தென்றார். 118

திருமணம் உங்கள் வீட்டில்
        செய்யினும், செலவு யாவும்
தருவது நாமே; சீரும்
        தந்திட நீங்கள் வேண்டாம்;
மருமகள் கல்வி கற்ற
        மங்கையாய் எங்கள் இல்லம்
வருதலே போதும் என்றார்;
        வாயசைத் தாள்பின் சோலை. 119

திருமண விரைவிற் கான
        செய்திக ளறிந்தேன்; மேலும்
தருவது (உ)ம் மகனுக் கென்று
        சம்மதம் தந்த பின்னர்
வருகிற தடைதான் என்ன?
        மடலினை வரைந்து நாளை
வரவழைத் திடுவேன் செல்வி
        மகளை நான் இங்கே என்றாள். 120

மகிழ்ந்தனர் உறுதி கேட்டு
வாயெலாம் பல்லாய்க் காட்டித்
"தகுந்தவள் செல்வி எங்கள்
தனையனுக் கென்று, பார்த்தோர்
பகர்ந்திடில் போதும்; பெற்ற
பயனெலாம் அடைவோம்" என்றே
அகன்றனர் விடையைக் கூறி
அளவிலாப் பூரிப் போடு. 121

வாசலில் நின்றும், அம்மா
வருகிறோம் என்று கூறிப்
"பூசல்கள் விளைக்கப் பல்லோர்
புகுந்திடும் காலம் அம்மா!
பேசவே வேண்டாம் இந்தப்
பேச்சினைப் பிறரி டத்தில்;
பாசம் நாம் கொண்டோம்; நாங்கள்
பார்த்த நாள் மணம்மு டிப்போம்." 122

என்றவர் சென்றார்; சோலை
இருந்திடும் நிலைம றந்தாள்;
சென்றவர் திசையை நோக்கித்
திளைத்தவள் சொன்னாள் தன்னுள்;
"என்றுநாம் நினைத்தோம், நன்மை
இப்படி நடக்கு மென்றே!
இன்றுதான் கண்டேன்; இன்னும்
இருக்கிறார் நல்ல வர்கள். 123

செல்விக்கே ஏற்ற ஆளன்
திரள் செல்வக் கோமான்; கல்வி
வல்லவன்; பெண்ணின் கல்வி
வளத்தினல்; செல்வம் சாழ்ந்த
இல்லிலே பெண்ணைக் கொள்ளும்
இதயநல் வலியோன் கொண்ட
நல்லியல் பெண்ணி மன்றல்
நாட்களை எண்ண லானள்" 124

"விரைக நீ! பத்து நாட்கள்
விடுமுறை வாங்கிக் கொண்டு
வருகநம் இல்லம்! இங்கே
வந்ததும் செய்தி யெல்லாம்
தெரியலாம் செல்வி!" என்று
தீட்டினள் மறுநாள் சோலை
சுருக்கமாய்ச் செல்விக்(கு) ஓலை;
தொடங்கினள் மன்றல் வேலை. 125

அடுத்தநாள் அஞ்சல் கண்ட
அணங்கவள் கலங்கிப் போனள்;
விடுத்துள செய்தி எந்த
விளக்கமும் கொடுக்க வில்லை;
தொடுத்துள சொற்கள் மிக்கச்
சுருக்கமே; என்ன தோன்றும்?
நடுப்பகல் வண்டி ஏறி
நண்ணினள் இரவே இல்லம். 126

வீடெலாம் வெள்ளை பூசி
விளங்கிடக் கண்டாள் ; வீதிக்
கோடியில் போகு முன்பே
கொண்டனள் குழப்பம் மேலும்
பாடிய பழங்க விக்குப்
பலபொருள் ஆய்வ தைப்போல்
நாடிடும் வீட்டில் என்ன
நடக்குமோ எனநு ழைந்தாள் . 127

தேடிய புதையல் கண்ணில்
தெரிவதைப் போலே, சோலை
ஓடினள் ; தெருவின் ஓரம்
ஒண்டொடி வருதல் கண்டு
கூடினாள் மகளை ; தொட்டுக்
கொஞ்சினாள் சிறுமி யைப்போல் ;
வாடிய நமது வாழ்வு
வளம்பெறப் போகு தென்றாள் . 128

அஞ்சலில் முதல்க லக்கம் ;
அடுத்தது வீட்டின் கோலம் ;
எஞ்சிய கலக்கம் அன்னை
இயம்பலில் ; புரியா தொன்றும்
துஞ்சினாள் நெஞ்சம் ; " என்ன !
சொல்லம்மா ! " . என்றாள் ; மேலும்
கெஞ்சினாள் ; கிடைத்த அஞ்சல்
கிறுக்கென ஆக்கு தென்றாள் . 129

புன்னகை காட்டிச் செல்வி
புத்தொளி முகத்தில் வேர்வை
நின்றதை நீக்கிப், பூவை
நீள்கரத் தால்தி ருத்தி
நன்றுதான் செய்தி, இன்னும்
நான்கு நாட் களிலே உன்னை
மன்றலில் காண்பேன் : ஆளன்
மன்மதன் ; செல்வச் சீமான். 130

அடுத்தவூர்ப் பண்ணை யாளர் ;
அழகனார் அவரின் கீழே ;
படித்தவுன் சிறப்பிற் காகப்
பணக்காரத் தனத்தை விட்டு
முடித்தனர் நமது வீட்டில்
முதல் மகன் மணத்தின் பேச்சை
படித்தவன் ; அழகன் : செல்வன் ;
பாவையுன் கணவன் என்றாள். 131

துடித்தனள் ; "அம்மா" என்று
சோர்ந்தனள் ; கீழே வீழ்ந்தாள் ;
பிடித்தனள் சோலை சொல்லாப்
பெரியதோர் அச்சம் கொண்டாள் ;
இடித்தது வானம் சோலை
இதயத்தில் ; நீர்கொ ணர்ந்து
குடித்திடச் சொல்லி அள்ளித்
தெளித்தனள் முகத்தில் கொஞ்சம். 132

தெளித்தநீ ரோடு கண்ணில்
திரண்டிடும் நீரும் சேர்ந்து
துளிர்த்தது கன்ன மெல்லாம்;
தொடர்ந்ததே ஆறாய் பாரில்;
விளித்தனள் தாயை; என்னை
வீழ்த்திட நினைத்தால் கூரின்
உளியினால் உறுப்பொன் றாக
ஒழித்திட லாமே என்றாள். 133

ஒழித்திட நினைத்தா செல்வி
உன்னை நான் வளர்த்தேன்? ஊரார்
பழித்திடா திருக்க உன்னைப்
படிக்கவும் வைத்தேன்; தந்தை
அழிந்ததை எண்ணு வண்ணம்
அன்புடன் அணைத்தேன்; காத்தேன்.
மொழிந்திடு பதிலை; கண்ணீர்
பயக்கமேன் சொல்வாய் கண்ணே!" 134

"அன்புடன் அணைத்தீர்; காத்தீர்;
அதிகமாய்ப் படிக்க வைத்தீர்.
என்பெலாம் உருக இன்பம்
இதுவரை இறைத்தீர்; ஆனால்
கொன்றிட நினைத்தீர் இன்று
கூறிடும் திருமணத்தால்;
என்னைநீர் வினவி டாமல்
எப்படி மணமு டித்தீர்? 135

"பெற்றவர் உரிமை வேறு;
பிறந்தவர் கடமை வேறு;
கற்றிடச் செய்தல் பெற்றோர்
கடமையாம்; மக்கள் தாமோ
பெற்றவர் மகிழ மன்றப்
பெருமையை அடைதல் வேண்டும்;
நற்றிறம் இல்லை, நாதன்
நானின்றி முடித்தல்" என்றாள். 136

கடிந்தனள் சோலை; கண்முன்
காண்பது செல்வி தானா?
படித்தவள் எனுஞ்செருக்குப்
பாய்ந்திடு தாளென் மேலே?
முடித்தது மணத்தை மொட்டை
மரத்திற்கா? முடவனுக்கா?
கொடுத்தது கொடுத்த வாக்கே;
கூறிடு; தடை தான் என்ன? 137

ஊரெலாம் மதிக்கும் செல்வம்
உன்னிரு காலில் வந்து
வேரொடு சாயுமென்றால்
விலக்குவ தேனோ? இந்தப்
பாரெலாம் பணத்தால் இன்று
பம்பர மாகுமென்றால்
சீரெலாம் சிறுமை என்று
சிரிக்கிறாய் சிறிய வள்நீ. 138

என்றதும் செல்வி வாளா
இருந்திடல் இனிமேற் குற்றம்;
வென்றிட வேண்டு மென்றால்
விளம்பிட வேண்டும் உண்மை.
ஒன்றிய மனத்தன் யாரென்
றுரைத்திட வேண்டும் இன்றே;
சென்றிட வேண்டும் கோவை
செயல்பெற எனநி னைத்தாள். 139

துணிந்தனள்; துக்கம் யாவும்
துறந்தனள்; அம்மா! கேட்பாய்!
பணிந்துநான் நடந்தேன்; நீ சொல்
பணியெலாம் ஏற்றேன்; ஆனால்
மணமெனில் உமது பேச்சை
மறுக்கவே செய்வேன்; காதல்
தணித்திடக் கரம்பி டிக்கத்
தக்கவன் ஒருவன் உள்ளான். 140

ஆளினைத் தேர்ந்து விட்டேன்;
அதனைநான் உமக்கு ணர்த்த
நாளினைப் பார்த்திருந்தேன்;
நம்பினேன்; ஆனால் நீவிர்
தேளினைப் பிடித்துத் தாலி
செய்கிறீர்; அரவ மாலை
தோளினில் சூட்டு கின்றீர்;
சொல்கிறேன் ஏற்க மாட்டேன். 141

படித்தவன் என்றும், செல்வப்
பரம்பரை என்றும், எண்ணித்
துடிக்கிறீர் மணப்முடிக்கத்:
தோண்டிய குழியில் தள்ளக்
கொடுத்துளீர் உறுதி; இந்தக்
குறுமதி ஏற்க நானும்
இடுக்கியில் எலியா? அன்றி
இளகிடும் நெய்யா? என்றாள். 142

காதலில் சிக்கி னாயா?
கணவனைத் தேர்ந்திட் டாயா?
ஆதலால் எமது பேச்சை
அடியொடு மறுக்கின் றாயா?
பேதைமை பெண்ணே! நானும்
பேயினி; தாயே இல்லை;
ஆதவன் மாறி னாலும்
அழித்திடேன் கொடுத்த வாக்கை, 143

செல்வரின் சினமோ வாழ்வைச்
சிதைத்திடும்; செய்வேன் என்று
சொல்லிய சொல்லைச் சொல்லித்
தூற்றுவர் ஊரார்; எந்த
வல்வினை குறுக்கிட் டாலும்
வாழவே மாட்டேன் என்று
செல்வியே! நீ சொன் னாலும்
திருமணம் உறுதி என்றாள். 144

தாய்மையே தெய்வம் ; ஆனால்
    தமிழர் தம் நாட்டி லின்று
மாய்க்கின்றார் அதனைக் கோணல்
    வழியிலே பணமென் றாலே
ஆய்கின்றார் இல்லை மக்கள்
    அகத்தினை : அடுக்கா தென்றால்
பாய்கின்றார் ; நெஞ்சில் பண்பும்
    பட்டிட வாழ்கின் றாரே. 145

அன்னையே ! சொல்வேன் ஒன்றை
    அதனை நீர் செய்தீர் என்றால்
என்னைப்பெற் றெடுத்த தற்கே
    ஈடிலாப் பெருமை உண்டு;
கொன்றெனைக் கிடத்திப் பின்னர்
    கூட்டுவீர் மணத்தை நன்றே
அன்றெனில் இல்லம் விட்டே
    அகன்றிடப் பணிப்பீர் என்றாள். 146

செல்வியின் மனம றிந்தாள் ;
    சிறையெனக் காத்தா லன்றிப்
பல்லியம் முழங்க மன்றல்
    பார்த்திட முடியா தென்றும்
செல்வரின் சொல்லைக் காத்துச்
    சேர்த்திட முடியா தென்றும்
ஒல்லையில் உணர்ந்தாள் ; செல்வி
    உடலுடன் நிழலாய் ஆனாள். 147

எண்ணலாம் எதையும் செய்ய
இம்மியும் முடியா தங்கே ;
கண்நிறை இனிய னுக்குக்
காகிதம் எடுத்து நெஞ்சப்
புண்ணெலாம் கூறி இங்கே
புறப்படக் கடிதம் தீட்ட
எண்ணினள் ; உழன்றாள் ; எண்ணி
என் செய்வாள் ? தாயோ காவல். 148

படித்தவள் ; உலகமெல்லாம்
பறந்திடத் திறமை பெற்றாள் ;
மடிகிறாள் வீட்டில் ; "பெற்றோர்
மடமையே மாய்க்கு தென்றால்
கொடிதினும் கொடிதே. இந்தக்
குறையறி வென்று மாளும்" ?
குடித்திட நஞ்சுங் கூடக்
குமரியின் துணைக்கங் கில்லை. 149

மூன்று நாள் முடிந்து, மன்றல்
முழங்கிடும் நான்காம் நாளும்
தோன்றிட விடிந்த தன்று ;
சுற்றத்தார், தின்று தீர்ப்போர்
சான்றெனநின்றார் ; செல்வி
தவித்தனள் சாக ; மீள
ஊன்றுகோல் போலே தாங்கி
உதவிட ஒருவ ரில்லை. 150

காலமும் விரைய ; நீரைக்
கண்களும் இழிய , நெஞ்சில்
ஓலமே நிறையச் , செல்வி
உருகிடும் வேளை , அன்புக்
கோலமாய் எதிரில் வந்தாள்
நிறைமதி ; கூடி , நட்பின்
மூலமே ! மதியே ! வா வா !
முழங்கினுள் செல்வி ஆங்கே . 151

அன்னையும் மகிழ்ந்தாள் , பெண்ணுள்
அடைந்துள மாற்றம் கண்டு ;
முன்னையத் துன்பம் நீங்கி
மூண்டதே இன்பம் ; தோழி
நின்றதால் , இனிமேல் செல்வி
நிம்மதி அடைவாள் என்று
சென்றனள் அங்கு மிங்கும் ;
சீவிட முடிக்கச் சொன்னுள் . 152

தனியறை வந்தார் ; தோழி
தயங்கினுள் ; கேட்ப தற்குள்
குனிந்தவள் மடியில் வீழ்ந்து
குமுறினுள் ; மதி ! என் வாழ்வு
கனிந்திடும் என்ருய் ; காதற்
கடவுளே இனியன் என்ருய் ;
கனிந்ததா இன்று ? கன்றிக்
காய்வதைக் காண்பா யென்ருள் . 153

வந்தநாள் முதலாய் அஞ்சல்
வரைந்திடா அச்சத் தாலே.
நொந்து நான் ஓடி வந்தேன் ;
நுழைந்ததும் இழவைக் கண்டேன் ;
வந்தது தோல்வி என்றால்
மனத்துணி வதிகம் வேண்டும் ;
வெந்திடும் சிதையை விட்டு
மீட்கிறேன் உன்னை என்றாள். 154

இறக்கவே நினைத்தேன் ; ஆனல்
என்னுயிர் இனியன் காதில்
" இறந்தது தாயால் ; காதல்
இழப்பினல்" என்றி யம்பப்
பறந்திடும் ஆளைத் தேடிப்
பதறினேன் ; சாவை எண்ணிக்
கிறங்கினேன் இல்லை ; தோழி
கிட்டினய் என்றாள் விம்மி. 155

சாதலா ! கோழைப் பெண்ணே !
சாற்றுதல், எண்ணல், வெட்கம் ;
ஈதலா உயிரை ! இந்த
இழிசெயல் துயருக் கஞ்சி
வாதிட நானிருக்க
மயக்கமேன் ? விடடி துக்கம் ;
பாதகம் விளையு தென்றால்
பாய்ந்திடும் வேங்கை யாவேன். 156



SITY EXTENSION L

அன்னைமேல் இல்லை குற்றம் ;
    அயர்ந்திடில் நமது குற்றம் ;
சன்னலில் வாடை வந்தால்
    சாத்திடா திருத்தல் குற்றம் ;
அன்னையின் அறிவில் குற்றம்
    அரும்பிடில் ஏற்றல் குற்றம்
கொன்றிட வேண்டும் குற்றம் ;
    கொள்கையை வெல்லல் ஏற்றம் . 157

செத்துநாம் காண்ப தென்ன ?
    செயலிலா மாந்தர் கூட்டம்
கத்திடும் காக்கை யைப்போல் ;
    கதறும்பின் மானங் கெட்டு ;
கொத்துவர் பிணத்தைச் ; சாவைக்
    கொண்டது நஞ்சால் என்பர் ;
புத்தியை விற்ருர் , காதல்
    போனதால் என்று சொல்லார் . 158

முள்ளினுல் முள்ளெ டுக்க
    முனைந்திட வேண்டும் ; நாமே
பள்ளியில் படித்த கல்வி
    பயனில்லை இங்கே ; வைக்கும்
புள்ளியில் கணக்கி ருந்தால்
    போடுதல் கோல மாகும் .
துள்ளுக ! என்ருள் தோழி
    சொல் ! வழி என்ருள் செல்வி . 159

செல்வியோ மேலும் சொல்லித்
தேம்பினுள் ; மதி ! நீ சொல்லும்
நல்வழி என்ன ? மீள
நாழிகை எங்கே உண்டு ?
பல்லியல் முரசம் மன்றல்
பந்தலில் முழங்கு தங்கே!
வெல்லலாம் என்ருல் எந்த
விதத்தினில் முடியுமென்ருள் ? 160

மணத்தினை மனத்தால் ஏற்ற
மகிழ்ச்சி நீ காட்ட வேண்டும் ;
குணத்திஞல் அறிவால் கொண்ட
கொள்கையை முடிக்க வேண்டும் ;
பிணங்கிடா மணப் பெண் ணென்று
பெற்றவள் அறியும் வண்ணம்
அணங்கு நீ நடக்க வேண்டும் ;
அறைக்கு வா என்ருள் தோழி. 161

விடியுமுன் தாலி கட்ட
விரைந்துள ஆண் வீட் டார்க்கும்
கொடுத்துள வாக்கிற் காகக்
குடியினைக் கெடுக்கும் தாய்க்கும்
படிப்பினை கொடுக்க உன்னைப்
பறந்திடச் செய்வேன் கோவை .
கொடியிலென் உடையை மாற்று ;
நினதெலாம் எனக்குப் போடு . 162

அறையில் நான் மணப்பெண் ணாக
அலங்கரித் திருக்கும் போதே
நிறைமதி உடையில் மெல்ல
நீ வெளி யேறு செல்வி!
கறையிலை இதிலே; பெண்ணைக்
கலந்திடாக் கயவர் கட்கே
அறைந்திட வேண்டும், பெண்கள்
ஆமைகள் இல்லை என்று. 163

தாரணி மாப்பிள் ளைக்குச்
சடங்குகள் சீர்கள் செய்ய
போரணி செல்வ தைப்போல்
போயினர் பெண்ணின் வீட்டார்;
தேர்ந்துள செய்தி இக்கால்
செயல்படத் தக்க நேரம்
ஓர்ந்துதான் நிறுத்தி வைத்த
ஊர்தியில் அவளைச் சேர்த்தாள். 164

பறந்தது ஊர்தி வெற்றிப்
பாதையில் கோவை நோக்கி
சிறந்தது காதல் என்று
செப்பிடும் தீரத் தோடு;
துறந்தனள் தாயைச், செய்தி
சொல்லிட மதியை விட்டே;
இறந்தவள் மீண்டு நெஞ்சத்(து)
இனியனை நோக்கிச் சென்றாள். 165

# இயல் 10

கண்ணீரில்

---

ஆலையின் பணியை ஏற்றே
அடுத்தவூர் சென்றிருந்த
வேலையை முடித்துக் கொண்டு
விரைவுடன் இனியன் அன்று
காலைதான் வந்தான்; அன்பன்
கடிதத்தைக் கண்டான்; சாவின்
ஓலைபோல் ஓல மிட்டான்;
உயிர்கொன்றுள் செல்வி என்றான். 166

இரண்டொரு மடலின் சொல்லை
இன்னொரு முறைப டித்தான்.
“திரண்டிடும் காதல் என்று
செப்பினாய் இனியா! இன்று
திரண்டதா காதல்? நைந்து
சிதைந்ததே! உன்னை விட்டுக்
கரந்தது! செல்வத் தோடு
கலந்தது காண்பாய்!” அன்பன். 167

படித்ததும் துடித்தான், குத்துப்
பட்டவர் உடலைப் போல;
அடித்தது புயலே அந்த
அறையெலாம்; செல்விக் கின்று
நடக்குமா மணம்? இச் செய்தி
நானிலத் துண்மை தானா?
பிடித்தனன் நெஞ்சை; ஈரல்
பிய்ந்திடும் உணர்வைக் கண்டான். 168

கடிதந்தான் பொய்யா! அன்றிக்
கன்னியின் மணந்தான் மெய்யா!
நடித்தது செல்வி தானா!
நம்பின மாந்தேன் நானா!
வடித்தது குருதி நெஞ்சம்!
வஞ்சனை நேரிற் காண
கடிந்தன கால்கள் கக்கும்
புகைவண்டி நிலையம் காண. 169

இரவினில் ஊரை நண்ணி
இறங்கினான் வண்டி விட்டே;
இரந்திடக் காதற் பிச்சை
எண்ணியே நடந்து வந்தான்;
பரவிய நாத வெள்ளம்
பாவைவீட் டுள்ளி ருந்தே
அரவமாய்ச் சீறிப் பாய்தல்
அவன் காதால் கேட்டான்; பார்த்தான். 170

சீருடன் வரிசை யெல்லாம்
செல்வியின் வீட்டி னுள்ளே
பேரிகை முழங்கப் பெண்கள்
பெருமையோ டெடுத்துச் செல்லல்
நேரிலே பார்த்தான்; நெஞ்சம்
நெருப்பிலே வேகக் கண்டான்;
ஊரினர் செல்வி வாழ்க்கை
உயர்ந்ததாய்ப் பேசிச் சென்றார். 171

"செல்வியின் துணைவன் செல்வப்
பிறவியாம்; நிலக்கி ழாராம்;
செல்வியின் படிப்பிற் காகச்
சேர்த்திட நினைத்திட் டானும்
கல்வியை மதிக்கும் காலம்
கனிந்தது;" இவ்வா றெல்லாம்
மெல்லவே பேசி மக்கள்
மணவினை காணச் சென்றார். 172

இதையெலாம் கேட்டு நின்றான்
இருளினில் தெருவோ ரத்தில்;
வதைபடும் நெஞ்சில் நூறு
வல்லீட்டி பாயக் கண்டான்;
கதையிலை; நேரிற் கண்டு
கருகினன்; காதல் வித்தாம்
விதையது அழுகி நாறி
விரவிடும் பணம்நு கர்ந்தான். 173

தெருவிலே மணவி ழாவைச்
செய்த நாள் எண்ணிப் பார்த்தான்;
பருவத்தில் பள்ளி வாழ்வில்
பழகிய நிலையு ணர்ந்தான்;
இருவரை ஒருவ ராக்கி
இணைத்தபூங் காவைக் கண்முன்
ஒருமுறை கொணர்ந்தான்; காதல்
உயிர்பறி போகக் கண்டான். 174

எப்படிச் செல்வேன் உள்ளே;
என்னநான் செய்வேன் சென்று;
"செப்படி வித்தை காதல்"
தெரிந்தது கடைசி யாக;
இப்படி நூறு பெண்கள்;
எளிதிது பெண்க ளுக்கே;
அப்படி உன்னைச் சொல்ல
அஞ்சுதென் மனமென் செல்வி! 175

மறப்பளா செல்வி! அன்றி
மறுத்தவள் தாயே தானா?
பிறவியில் இருவர் என்றாள்;
பிரிந்திடில் இறப்பென் றாளே!
உறவெலாம் கண்டால் தானா!
உலகமே பொய்மை தானா!
கறந்தபால் மடியே றாது;
கடிமணம் இனிமா றாது. 176

இனியவள் மேற்க ளங்கம்
சொல்லித்தான் என்ன காண்பேன்!
இனியவள் என்னைக் கண்டால்
இன்னலைத் தானே எற்பாள்;
வனிதை என் செல்வி! வாழ்க!
மணமகன் நெஞ்சில் ஏறி;
முனிந்திடேன் பாரேன்: ஆனால்
முடிந்ததென் வாழ்வு மட்டும். 177

எண்ணிய மாற்றம் கண்டால்
இழப்பெனில் நம்பிக் கைக்கு
புண்படல் மட்டு மின்றிப்
புவியெலாம் வெறுத்துப் போகும்.
மண் பொருள் இழந்தால் மீளும்;
மனம்விடில் மீளா தின்பம்;
கண்வழி நீரைக் கொட்டிக்
கருதினான் இவற்றை யெல்லாம். 178

வான்மதி உயர நின்று
வாழ்விழந் தானைக் கண்டு
சான்றுநான் செல்விக் கென்று
சாற்றியே நகைத்த தங்கே.
ஏன் எனைப் பிடிக்க வந்தாய்?
எட்டுமா கரங்க ளுக்கு?
வான்மதி உமது செல்வி
வந்திடாள் எனச்சொல் லிற்று. 179

வான்மதி! ஆமாம்! செல்வி
வான்மதி எனது வாழ்வில்;
வான்மதி கைக்கெட் டாது;
வளர்கிறாள் அதிலென் செல்வி;
கூனனின் கண்கள் நோக்காக்
கொம்புத்தேன் இனியென் செல்வி:
ஊனமென் நெஞ்சில், இந்த
உலகெலாம் இனியென் சொத்து. 180

சேல்விழிச் செல்வி! உன்னைத்
திருடியென் றழைக்க மாட்டேன்;
கோலினால் அளந்தேன் இல்லை;
கொள்கையால் உணர்ந்த வன்நான்;
நூல்வழி பெறுமின் பம்போல்.
நினைநினைந் தடைவேன் இன்பம்;
கால்வழி சென்றான் சொல்லிக்
காற்றுடன் கலந்தே போனான். 181

# இயல் 11

## மன்றலில்

மணமகன் வீட்டுச் சீரை
　　முடித்ததும் திருநாண் பூட்ட
மணமகன் தனையழைத்து
　　வந்தனர் பெண்ணின் வீடு
மணமகள் தம்மைக் கூட்ட
　　மகிழ்ச்சியாய் அறைக்குள் சென்றார்.
மணமகள் அங்கே இல்லை
　　மணப்பெண்ணாய்த் தோழி நின்றாள். 182

என்னடி? செல்வி எங்கே?
　　ஈதென்ன கோலம் என்றார்;
மன்றலைக் காண இந்த
　　மணக்கோலம் இல்லையம்மா;
என்னரும் தோழி வாழ்வை
　　இனித்திடச் செய்ய, காக்கத்
தன்னலங் கருதி டாமல்
　　தாங்கிய வேட மென்றாள். 183

செல்வியின் வாழ்வி னிக்கச்
செய்ததென் ? செல்வி எங்கே ?
சொல்லடி திருடி ! செய்த
சூழ்ச்சியென் ? என்னைத் தீய்க்கக்
கொல்லியாய் வந்த கள்ளக்
குறத்தியே ! செல்வி எங்கே ?
சொல்லடி சூதுக் காரி ?
சொல்லடி ? என்றாள் சோலை. 184

அமைதியாய் அனைத்தும் கேட்டாள் ;
அறிவுடன் பதிலு ரைத்தாள் ;
இமைத்திடும் நேரம் பிந்தி
இங்குநான் வந்தி ருந்தால்
உமதில்லம் இவ்வா றில்லை ;
ஒப்பாரி கேட்டி ருக்கும் ;
சமைத்துள பந்தல், செல்வி
சடலத்தைக் கண்டி ருக்கும். 185

ஆவியைத் துறக்க வைர
அணியினைப் பொடித்த போது
கூவிநான் வந்தேன், செல்வி
குறையினைத் தீர்ப்பேன் என்றே
“ஓவிய மாய் என் உள்ளம்,
உயிரினில், வரைந்த காதல்
காவியம் எரியு தென்றாள்”
கலங்கினேன் ; காத்தேன் என்றாள். 186

என்மகள் வாழ்வைக் காக்க
　　எனக்கிலா உரிமை இந்தக்
கன்னிக்கேன் என்ருள்! நின்ருேர்
　　கலங்கினர்; முணுமுணுத்தார்;
“என்னதான் பேசினாலும்
　　இனி மணம் இல்லை; என்னை
ஒன்றுமே செய்தற் கில்லை;
　　உயிர்விட அஞ்ச மாட்டேன். 137

நீதியைத் துணையாய்க் கொண்டேன்;
　　நீண்டதோர் மடலைச், செல்வி
வாதிட எழுதித் தந்தாள்;
　　வைத்துளேன்; அதிலே அன்னாள்
ஓதிடும் உரைகளெல்லாம்
　　உரிமையைக் காக்கத், தானே
வீதியை நாடி வீட்டை
　　விட்டதாய்க் கூறி யுள்ளாள். 188

தாய்மையைக் கொன்றீர்; பெற்ற
　　தங்கத்தைச் சாகடிக்க
வாய்த்தநீர் வாய்தி றத்தல்
　　வஞ்சகம்; மணமகன்பால்
போய் சில சொல்வேன்; அன்னார்
　　புகல்வதை நாமே கேட்போம்;
ஆய்ந்தவர் அறிவின் மேலார்
　　அவருளம் அறிவோம்” என்ருள். 189

அன்பரே! அறிவின் மிக்கோய்!
ஆருயிர்த் தோழி செல்வி,
அன்னையே தெய்வ மென்ற
அறிவினள்; அன்னை நோகச்
சொன்ன பேச் சில்லை; சொன்னால்
சொல்வதற் கட்டி யில்லை;
அன்னவள் இன்று சென்றாள்
ஆய்க நீர்! யார் மேற் குற்றம்? 190

பெண்ணினம் திருந்தக் கொட்டும்
பேரொலி முரசம் அன்னாள்;
தண்டமிழ் நூல்கள் கற்றாள்;
தையலர் உரிமை தேர்ந்தாள்;
பண்டையப் பெண்டிர் வாழ்வும்
பதைத்திடும் இந்நாள் வாழ்வும்
கண்டவள் எண்ணங் கேளாக்
கடிமணம் யாருக் காக? 191

மடலினை எழுதிக் கூட்டி
மணமெனில் யாரே ஏற்பார்?
மடமைகள் ஏற்கும்; உள்ள
வலிவிலாத் தசைகள் ஏற்கும்;
கடமைதான் தாய்க்கென் றாலும்
கன்னியைக் கலந்து செய்தல்
கடமையில் முதன்மை யாகும்;
களிமணம் பிறவி நோக்கம். 192

என்றனள்; குனிந்தி ருந்த
இளைஞனும் நிமிர்ந்தான்; சொன்னான்:
நன்றுநும் விளக்கம்; உண்மை
நானதை ஏற்றேன்; நானும்
கன்னியை மணம்மு டிக்கக்
கருதினேன், கலந்தேன் இல்லை;
மன்றலில் குழப்ப மேனும்,
வாழ்வினைக் காத்தாய் என்றான். 193

வந்தவர் வாய டைத்தார்;
வனிதையைப் போற்றி நின்றார்;
சொந்தவூர் திரும்பி னார்கள்
சுற்றமும் ஆண்வீட் டாரும்;
சந்தையின் கூச்ச லில்லை
சரி சரி நீதி யென்றார்;
நொந்தவள் சோலை மட்டும்
நோயுடை யாள்போல் வீழ்ந்தாள். 194

# இயல் 12

## ஆலையில்

விடிந்தொரு மணிக்குள் ஆலை
வாசலில் நின்றாள் செல்வி ;
துடித்தனள் இனியன் கையைத்
தொட்டிட ; உறுதி சொல்ல
படிந்திட வந்த மாசு
படியுமுன் பறந்து வந்த
முடிவெலாம் சொல்ல எண்ணி
முன்னுள அறைக்குச் சென்று , 195

இனியனின் அறையெ தென்றாள் ?
இருந்தவர் உள்ளி ருந்து
தனியறை அவருக் கில்லை
தங்குதல் என்னு டன்தான் ;
இனியவர் இங்கு வாரார்
என்றொரு மின்னின் செய்தி
தனைப்பொறுப் பாள ருக்குத்
தந்துளார் காலை என்றார் . 196

உண்மையா ஐயா? என்றாள்;
உளறினாள்; உகுத்தாள் கண்ணீர்;
திண்ணமாய் வரமாட் டாரா?
திசைமாறிற் றெனது வாழ்வு!
அண்ணலே! செய்தி எந்த
ஊரிருந் தனுப்பி யுள்ளார்?
கண்ணெலாம் புண்ணா யிற்றுக்
கலங்கினார் கேட்ட நண்பர். 197

என்றவர் சென்றார்? ஐயா
எங்கவர் சென்றார்? சொல்வீர்!
மன்றலைக் கேள்விப் பட்டு
மனமுடைந் தேகி னாரா?
கன்னியைக் கள்ளி யென்று
கருதித்தான் ஓடி னாரா?
ஒன்றுமே புரிய வில்லை;
உரையுங்கள் அண்ணா என்றாள்! 198

ஏழுநாள் வெளியூர் சுற்றி
இங்கவர் நேற்று வந்தார்;
சூழ்ந்திட்ட கடிதக் கற்றைத்
திறந்தொன்றாய்ப் படிக்க லானார்;
பாழுமோர் அஞ்சல் பார்த்துச்
செல்விக்கு மணமா என்றார்;
"வீழ்ச்சியே இனி என் வாழ்வில்
விடிவதே இல்லை" என்று 199

விடுமுறைக் கடிதம் தந்து
விலகினார் ; வேற்றூர் சென்றார் ;
அடுத்தது விலகல் செய்தி
அனுப்பினார் சென்னை நின்று ;
எடுத்துநான் மொழியும் செய்தி
இவளவே ; மின்னின் செய்தி
கொடுத்துள சென்னை சென்று
குறையினை அறிவீர் என்றார் . 200

அன்பரே ! எங்கு செல்வேன் !
ஆளனைக் காண்ப தெந்நாள் ?
மன்றலில் செத்தி ருந்தால்
மதிப்பினைப் பெற்றி ருப்பேன் .
கன்று நான் தாயி ழந்தேன் ;
கைகொடுத் தென்னைக் காக்கக்
குன்றென நம்பி வந்த
குரிசிலை இன்றி ழந்தேன் . 201

அரற்றினள் : தேம்பித் தேம்பி
அழுதனள் ; காண்போம் என்ற
உரத்தினை இழந்தாள் ; வாய்ப்பே
ஒருவரை ஒருவர் விட்டுத்
துரத்திய தென்றாள் ; சோர்ந்து
சுருங்கினள் மேனி ; நெஞ்சம்
மரத்தனள் ; மணத்தைக் கேட்டே
மறைந்தனர் ; ஐயோ என்றாள் ! 202

ஆலையின் நண்பர் மிக்க
ஆறுதல் கூறிச் சென்னை
காலையே சென்று காணக்
கன்னியைப் பணித்தார்; அங்கோர்
மூலையில் சுவற்றில் தங்கி
இனியனின் முகத்தைக் காட்டும்
கோலஞ்சேர் படமெ டுத்துக்
கொடுத்தனர் நண்பர்; சென்றாள். 203

# இயல் 13

## சென்னையில்

சென்னையின் தெருக்க ளெல்லாம்
செல்வியின் சீர டிக்கீழ் ;
ஒன்றிய உயிரோ , நம்பும்
உளத்தின்கீழ் ; பார்ப்போ ரெல்லாம்
சென்றவன் நிழலாய்த் தோன்றத்
தேங்குவாள் ; திகைப்பாள் ; செல்வாள் ;
கொன்றனன் உயிரோ டென்று
கூறுவாள் ; நடப்பாள் மேலும் . 204

இனியனைத் தேடித் தேடி
எங்கிடும் நான்காம் நாளில்
கனிமொழித் தோழி வாடிக்
கண்முனே வரவும் கண்டாள் .
" நினைத்தது முடிய வில்லை
நினைப்பெலாம் இடிந்த(து) அன்பே !
இனியென செய்வேன் ? காதல்
இழப்புத்தான் " என்றாள் வாழ்வில் . 205

காதல னுடனே உன்னைக்
காணவே ஆலை வந்தேன் ;
மேதகு நண்பர் மூலம்
விளைந்ததை விரிவாய்க் கேட்டேன் ;
சாதனை என்ற எந்தன்
தருக்கெலாம் நொறுங்கி வீணாய்
வேதனைக் கடலில் மூழ்கி
வீழ்ந்தது ; விரைந்தேன் காக்க. 206

என்றதும் செல்வி சொல்வாள்,
இன்னுமா என்னைக் காக்க
ஒன்றினாய் ? மதி ! நீ தாயே !
உன்னிலும் துணைவே றில்லை ;
நன்றியுன் செயலுக் கெல்லாம் ;
நானினி நடைப்பி ணந்தான் ;
வென்றிட வந்தேன் ; வாய்ப்பு
வீணாக்கி விட்ட தென்னை. 207

கன்னிநான் சாகு மட்டும்
காதலன் நெஞ்சில் வாழ்வான் ;
மன்னனை மனத்தாற் கொஞ்சி
மகிழுவேன் ; அதிலே காணும்
இன்பமும் காதல் என்பேன் ;
இனியெனக் கொருவ ரில்லை ;
சென்றிடு மதிநீ பள்ளி ;
சிறப்பொடு வாழ்க ! பன்னாள் · 208

“ இனியெனக் கொருவ ரில்லை ”
என்றுநீ இயம்பல், சாவுச்
சுனையிலே நானும் வீழ்ந்து
தொலைந்தபின் பொருத்த மாகும்.
தனியளாய் விட்டுச் செல்லேன்;
தலைவனை இழந்தாய்; அன்னோன்
நினைப்பொடு கன்னி யாக
நீயிரு என்னொ டென்றான். 209

தலைவனை இழந்தாள்; தோழி
தண்ணளி நிழலில் வாழ்ந்தாள்;
குலைந்ததன் காதல் வாழ்வைக்
குளிர் மதி அன்பாய்க் கண்டாள்;
அலைந்திடும் மனம டக்க
அவள் பழம் பணிமேற் கொண்டாள்;
சிலைநிகர் செல்வி, நாளும்
தேய்கிறாள் வாழ வில்லை. 210

## இயல் 14

### தெருவில்

சென்னையில், தெலுங்கர் நாட்டில்,
சேர்கிறான் வங்காளத்தில்;
முன்செல்வான் பின்னே நோக்கான்;
மூன்றுநாள் பசியும் காப்பான்;
தன்னிலை யறியான்; யாரும்
தந்திடில் உண்பான்; நில்லான்;
கன்னியை எண்ணி நாளும்
கரைகிறான் காதற் செல்வன். 211

வான்மதி காண்பான்; அங்கே
வாழ்ந்திடும் செல்வி காண்பான்;
வான்மதி கொள்ளும் நோக்கம்
மடமையில் மடமை என்பான்;
வான்மதி குளிர்ச்சி ஏற்று
மகிழ்ந்திடல் உரிமை என்பான்;
வான்மதிச் செல்வி எண்ணும்
மனத்தினால் வாழ்கின்றானே.
—முற்றும்.— 212



...ITY EXTENSION...

## "அவளுக்காக" பற்றிய மதிப்புரைகள்

### தமிழ் நாடு

நாடகத்தின் கதையமைப்புச் சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளது. எளிய இனிய நடையைக் கையாண்டுள்ள ஆசிரியர் முயற்சி பாராட்டத் தக்கது.

*   *   *   *

### கலைமன்றம்

பல் வேறு ஊர்களில் பொறுப்பான "அமெச்சூர்" நடிகக் குழுவினராலும், கல்லூரி மாணவர்களாலும் நடிக்கப் பெற்றுப் புகழ் எய்திய நல்லதொரு நாடகம். இந்நாடகத்தின் அரங்கேற்று விழாவின் போது "காதல்" ஆசிரியர் அரு. ராமநாதன் குறிப்பிட்டது போல் காதல் மணத்தின் அவசியத்தை அடிப்படையாகக் கொண்ட புதுமை நாடகம். அழகான முகப்பு. உயரிய தாள். நாடெங்கும் நடைபெறவேண்டிய நன்சுவை நாடகம்.

*   *   *   *

### மலேயா தமிழ் முரசு

விறுவிறுப்பான நடையில் விழுமிய கருத்துக்கள் செறிந்து காணப்படுகின்றன. கண்மூடிப் பழக்க வழக்கங்களும் பகுத்தறிவுக் கொவ்வாப் பண்டைய நடைமுறைகளும் மண்மூடி மறைந்தொழிய வேண்டும் என்ற கருத்திலே இது போன்ற எண்ணிறந்த நூல்களை இதனாசிரியர் திரு. பெரி. சிவனடியான் எழுத வேண்டும் என்று கருதும் கருத்துடையோர். அனைவரும் இதனைப் படித்து ஆக்கம் தருவர் என்பது எமது நம்பிக்கை.

*   *   *   *

ரெங்கூன் "தந்தி"

"அவளுக்காக" என்ற நாடகத்தை அருமையாக எழுதியுள்ளார் இதன் ஆசிரியர். தூய தமிழிலே நாடகம் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. நகைச் சுவை - வீரச்சுவை இவ்விரண்டும் நாடகத்தில் சிறப்பாக விளங்குகின்றன. அவளுக்காக படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நூல்

* * * *

அகிலன்

நாடகம் என்ற வகையில் பாத்திர உருவம், வசனம், காட்சிகளின் தொடரமைப்பு எல்லாம் கச்சிதமாகவே அமைந்திருக்கின்றன. வசனங்களை உணர்ச்சியும் அழகும் சேர அமைத்திருக்கிறீர்கள். படிப்பதற்கு வேகமாக விறுவிறுப்புள்ள நாடகம், நடிப்பதற்கும் அப்படியே இருக்குமென்பதில் ஐயமில்லை. கதாநாயகன் பாண்டியனும் எதிரி வேலாயுதமும் முழு உருவங்களுடன் விளங்குகிறார்கள். நகைச்சுவைப் பகுதிகள் சுவை மலிந்துள்ளன. தங்கள் எழுத்தும் அமைப்பும் என்னை மகிழ்விக்கின்றன.

* * * *

தமிழண்ணல்

அவளுக்காக படித்தேன். நடையும் கருத்தும் உள்ளம் ஒன்றி எழுதிய பாங்கும் கண்டு மிக மகிழ்ந்தேன். மிகச் சிறந்த படைப்பு. காதல் படைப்பில் "உச்சி"யைத் தொடும் அழகுக் கட்டங்களைத் தங்களால் ஆக்க இயலும் என நம்புகிறேன்.

* * * *

மாணவர்கள் (திருவையாறு தமிழ்க் கல்லூரி)

மனத்தில் அமைதியற்ற சூழல் ஏற்படும்போது அதனை மாற்றக் கூடிய அளவிற்கு அவளுக்காக நூலில் சில காட்சிகள் உள்ளன. நலில் தொறும் நயம் காண முடிகிறது.

இந்நூல் ஒரு பெரும் பொழில்-எழில் நிரம்பிய பொழில். அப்பொழிலிடத்தே எண்ணற்ற வண்ண மலர்கள் கண்ணுக்கு மட்டுமின்றி, கருத்துக்கும் விருந்தூட்டுகின்றன.